இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்


www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 32 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 24 – ஞாயிற்றுக்கிழமை 10 செப்டம்பர் 2023 – வெளியூர் 12 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 32: Thiruvalluvar Year - 2054 - Aavani 24 - Sunday 10 September 2023 - Dak 12+12 Pages ₹ 5.00

## பொய் பரப்புரைகளுக்கும், திசை திருப்புபவர்களுக்கும் முக்கியத்துவம் தராமல்

# இந்தியாவைக் காப்பாற்ற ஊடகங்களும் பங்களிப்பைச் செலுத்த வேண்டும்!

## கேரள மீடியா அகாடமியின் “மீடியா மீட் 2023” நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) சென்னையில் நடைபெற்ற கேரள மீடியா அகாடமியின் மீடியா மீட் 2023 நிகழ்ச்சியில், பிரபல ஊடகவியலாளர் சசிகுமார் அவர்களை பற்றிய ”Unmediated என்ற YouTube Channel பதிவை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கேரள மாநில முன்னாள் கல்வி மற்றும் கலாச்சார விவகாரங்கள் துறை அமைச்சர் எம்.ஏ. பேபி, “The Changing Mediascape” நூலாசிரியர் பாஸ்கர், ஏசியா நெட் மீடியா குழுமத்தின் நிறுவனர் சசிகுமார், டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழின் ஆசிரியர் அருண் ராம், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், மலையாளம் மிஷன் தலைவர் டாக்டர் அனுப், கேரள மீடியா அகாடமியின் தலைவர் ஆர்.எஸ். பாபு, செயலாளர் சந்தோஷ், மலையாளி கிளப் தலைவர் என்.ஆர்.பணிக்கர், மெட்ராஸ் கேரளா சமாஜ் தலைவர் சிவதாசன் பிள்ளை மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.’

**சென்னை, செப். 10-**

**சென்னையில் நடைபெற்ற கேரள மீடியா அகாடமியின் “மீடியா மீட் 2023” நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், பொய் பரப்புரைகளுக்கும், திசை திருப்புபவர்களுக்கும் முக்கியத்து வம் தராமல் ஊடகங்கள் இந்தியாவைக் காப்பாற்ற தங்களது பங்களிப்பையும் செலுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) சென்னையில் நடைபெற்ற கேரள மீடியா அகாடமியின் “மீடியா மீட் 2023” நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு: -

சில நாட்களுக்கு முன்பு, ஓணம் திருநாளைக் கொண்டாடிய நமது மலையாள மொழிச் சொந்தங்களுக்கு, மலையாளத்தில் என்னுடைய வாழ்த்துகளைச் சொன்னேன். இதற்கு முன்பு கேரளாவில் நடைபெற்ற மாநாடு ஒன்றிலும் நான் மலையாளத்தில் பேசியிருக்கிறேன்.

நாம் ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அதாவது திராவிட மொழிக் குடும்பத்தை சார்ந்தவர்கள். சமத்துவத்திற்கு எதிராக இருக்கக்கூடியவர்களுக்கு இன்றைக்கு ‘திராவிடம்’ என்று சொல் ஒரு எரிச்சலாகவே இருக்கிறது.

கேரள அரசின் கீழ் இயங்கக் கூடிய தன்னாட்சி பெற்ற நிறுவனமாக கேரளா மீடியா அகாடமி செயல்பட்டு வருகிறது. சார்புத் தன்மை இல்லாத மதச்சார்பின்மையை போற்றுகின்ற ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்கு இந்த அகாடமி பங்காற்றி வருகிறது. இன்றைய நிலைமையில் இது மிகவும் தேவையான ஒன்று. ஊடகத்தினர் சுதந்திரமாக செயல்பட்டால் தான் நாட்டின் ஜனநாயகம் உயிர்ப்போடு இருக்கும். அந்த வகையில் மிக சிறப்பான நீண்ட அனுபவம் மிக்க ஊடகவியலாளர்களால் நிர்வகிக்கப் படும் இந்த அகாடமி எதிர்காலத்திலும் அத்தகைய ஊடகவியலாளர்களை உருவாக்குவதில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கேரள மீடியா அகாடமி சார்பில் நடைபெறும் இந்த சிறப்பான விழாவில் பங்கெடுத்து உங்களை எல்லாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பை பெற்றமைக்கு நான் பெருமை அடைகிறேன்.

இந்த விழாவில் பங்கெடுக்க வேண்டும் என்று, அருமை நண்பர் அருண்ராம் அவர்கள் என்னை அழைத்தார்கள். தலைவர் கலைஞர் அவர்களுக்கும் நெருக்கமான பத்திரிக்கையாளர்களில் ஒருவராக இருந்தவர் நம்முடைய அருமையான நண்பர் அருண்ராம் அவர்கள். அதேபோல் என் மீதும் அன்பு காட்டக் கூடியவர்தான் அருண்ராம். அந்த வகையில் அவரது அழைப்பை ஏற்று இங்கு நான் வருகை தந்துள்ளேன்.

**பி.ஆர்.பி.பாஸ்கரின் 70 ஆண்டு காலம் எழுத்து-ஊடகத்துறையில் பங்களிப்பு!**

ஏசியாநெட்டின் நிறுவனர் சசிகுமார் அவர்களும் இங்கு வருகை தந்துள்ளார். நடிப்பு, திரைப்படத் தயாரிப்பு, திரைக்கதை எழுதுதல் எனப் பன்முக ஆற்றலைப் பெற்றவர் இவர், இப்போது சென்னை ஆசிய இதழியல் கல்லூரியின் தலைவராக இருக்கிறார்.

மரியாதைக்குரிய மூத்த பத்திரிக்கையாளர் பி.ஆர்.பி.பாஸ்கர் அவர்கள் எழுதிய ‘THE CHANGING MEDIASCAPE’ என்ற முக்கியமான நூலை வெளியிடுவதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன். அவருக்கு வயது 91. 70 ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகத் துறையில் செயல்பட்டு வருவதைப் பார்க்கும் போது எழுத்தின் மீதும், ஊடகத் துறையின் மீதும், அதையும் தாண்டி இந்த நாட்டு மக்கள் மீதும் அவர் கொண்டுள்ள உண்மையான அக்கறையை நமக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. தி இந்து பத்திரிக்கையில் 1952ஆம் ஆண்டு சேர்ந்து அங்கு ஆறு ஆண்டுகள் பணியாற்றி இருக்கிறார்.

* தி ஸ்டேட்ஸ்மேன்
* பேட்ரியாட்
* யு.என்.ஐ செய்தி நிறுவனம்
* தி டெக்கான் ஹெரால்டு
* ஏசியா நெட் எனப் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார்.

செய்தி நிறுவனங்களுக்காக இந்தியாவின் பல்வேறு நகரங்களில் அவர் பணியாற்றி இருக்கிறார். உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்றும் இருக்கிறார். எனவே இந்த நூலை படித்துப் பார்த்தால் உலகம் முழுக்க பயணம் செய்யும் அனுபவம் நமக்கு ஏற்படும்.

அச்சு ஊடக காலம் தொட்டு ஊடகங்களின் இன்றைய மாற்றம் வரை அவர் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை இந்த நூலில் பதிவு செய்துள்ளார் பாஸ்கர் அவர்கள்.

**பத்திரிகையாளர்களுக்கு பாடமாக விளங்கும் நூல்!**

அவருடைய கட்டுரைகள், செய்திகளுக்கு பின்னால் இருக்கும் ஆர்வம், அணுகுமுறை, தெளிவான சிந்தனை ஆகியவை இன்றைய

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## 2 நாட்கள் நடைபெறுகிறது!

# டெல்லியில் ஜி20 மாநாடு தொடங்கியது!

*புதுடெல்லி, செப். 10 -*

*டெல்லியில் 2 நாள் நடைபெற உள்ள ஜி20 மாநாடு தொடங்கியது. டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் ஜி20 மாநாட்டில் பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். 2 நாள் ஜி20 மாநாடு பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் தொடங்கியது. பிரதமரின் நாட்டை குறிக்கும் இடத்தில் இந்தியா என்பதற்குப் பதிலாக பாரத் என இடம் பெற்றுள்ளது.*

*ஜி20 மாநாட்டின் முதல் அமர்வில் காலநிலை பற்றி விவாதிக்கப்படும் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*முதல் அமர்வு முடிந்தவுடன் உலகத் தலைவர்களுக்கு மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் மோடி விருந்தளிக்கிறார்.*

*ஜி20 மாநாட்டு தலைவர்களை வரவேற்று பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். மொராக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஜி20 மாநாட்டில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. தற்போதைய சூழலில் மனிதநேய அடிப்படையிலான நடவடிக்கைகள் தேவை என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இந்தியா தலைமை தாங்கும் ஜி20 மாநாடு டெல்லியில் நேற்று பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் தொடங்கியது. இரண்டு நாட்கள் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் பொருளாதாரம் மேம்பாடு, காலநிலை மாற்றம், எரிசக்தி விவகாரம் , சர்வதேச கடன் கட்டமைப்பு, சீர்திருத்தம், கிரிப்டோ கரன்சி மீதான கட்டுப்பாடு உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்படுகிறது.*



*ஜி20 மாநாடு உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் விமான மூலம் இந்தியா வந்தடைந்தார். அதிபர் ஜோ பைடனை ஒன்றிய இணை அமைச்சர் வி.கே. சிங் வரவேற்றார். அவருக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*இதைத்தொடர்ந்து பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் ஜோ பைடன் சந்தித்து பேசினார். இந்தியா வந்துள்ள ஜி20 தலைவர்களுக்கு நேற்று முன்தினம் இரவு சுவையான இந்திய சைவ உணவு பரிமாறப்பட்டது. ஜி20 மாநாடு இந்தியாவில் நடைபெறும் நிலையில் தொழில்நுட்ப முன்னேற்றம், உட்கட்டமைப்பு, மனிதவளம் போன்றவற்றை சர்வதேச நாடுகள் அறிந்து கொள்ள இது மிகச்சிறந்த நல்வாய்ப்பாக அமையும் என்று கூறப்படுகிறது.*

## ஜி20 மாநாடு: இந்திய குடியரசுத் தலைவர் அழைப்பின்பேரில் விருந்தில் பங்கேற்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் டெல்லி பயணம்!

## விமான நிலையத்தில் கழக எம்.பி.கள் உற்சாக வரவேற்பு!

**புதுடெல்லி, செப்.10-**

**புதுடெல்லியில் நடைபெற்று வரும் ஜி20 மாநாடு நிகழ்ச்சியில் பங்கேற்கும் உலகத் தலைவர்களுக்கு இந்திய குடியரசுத் தலைவர் விருந்து அளிக்கிறார். இந்த விருந்தில் பங்கேற்க முதல்வர் மு.க.ஸ்டாலின்அவர்கள்நேற்றுகாலை புதுடெல்லி புறப்பட்டுச் சென்றார்.**

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஐரோப்பிய யூனியன், சீனா, இந்தியா, ஜப்பான், சவூதி அரேபியா உள்ளிட்ட 20 நாடுகளைகொண்ட ஜி20 அமைப்பின் 18வது உச்சி மாநாடு டெல்லியில் நடைபெறுகிறது. பல்வேறு காரணங்களுக்காக ரஷ்ய அதிபர் புதின், சீன அதிபர் ஜின்பிங் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

டெல்லி பாரத் மண்டபத்தில் ஜி20 மாநாடு தொடங்கி நடைபெற்றுவருகிறது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஆஸ்திரேலிய பிரதமர் அன்டோனி அல்பானிஸ், வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, ஜப்பான் பிரதமர் Fumio Kishida, துருக்கி அதிபர் எர்டோகன், ஐக்கிய அரபுஅமீரகஅதிபர்ஷேக்முகமது பின் சயத் அல் நஹ்யன் உள்ளிட்டோர் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்ற கருப்பொருளுடன் ஜி20 மாநாடு நடைபெற்றுவருகிறது. ஜி20 நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, பல்வேறு துறைகளில் இந்நாடுகள் அனைத்தும் இணைந்து செயல்படுவது, பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது. ரஷியாஉக்ரைன்போர்காரணமாக ஐரோப்பிய நாடுகளில் எரிசக்தி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சூழலில், இந்த ஒப்பந்தம் குறித்து ஜி20 மாநாட்டில் உறுதியான முடிவு எடுக்கப்படும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.


**முதல்வர் மு.க.ஸ்டாலின் டெல்லி வருகை தந்தார்!**

இந்நிலையில்ஜி20மாநாட்டுக்கு வருகை தந்துள்ள உலகத் தலைவர்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருந்தளித்து சிறப்பிக்க உள்ளார்.

இந்நிலையில், விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்க ஒன்றிய அமைச்சர்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உட்பட அனைத்துமாநிலமுதலமைச்சர்களுக்கும்குடியரசுத்தலைவர்அழைப்புவிடுத்திருந்தார்.

குடியரசுத் தலைவரின் அழைப்பைஏற்றுநிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்கள், சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்று காலை டெல்லி சென்றடைந்தார். முன்னதாகசென்னைவிமான நிலையத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயரதிகாரிகள் மற்றும் தி.மு க. நிர்வாகிகள் முதலமைச்சரை வழியனுப்பி வைத்தனர்.

புதுடெல்லி வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத்தலைவருமானடி.ஆர். பாலுஅவர்கள்தலைமையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள்உற்சாகவரவேற்பளித்தனர்.



புதுடெல்லியில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டினையொட்டி குடியரசுத் தலைவர் அளிக்கவுள்ள விருந்தில் அழைப்பின்பேரில் கலந்து கொள்வதற்காக புதுடெல்லிக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.9.2023) விமான நிலையத்தில், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் வரவேற்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.9.2023) எம்.ஜி.ஆர். கழகத்தின் நிறுவனரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.எம்.வீரப்பன் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார். உடன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் ஆகியோர் உள்ளனர்.

## சென்னையில் மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, செப்.10-

கோவை மற்றும் நீலகிரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவானிலை மையம் தெரிவித்துள்ளது. சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இன்று (10ந்தேதி) ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

### நூறு ஆண்டுகள் கடந்தும் வாழ

# அண்ணன் ஆர்.எம்.வீ.யை நெஞ்சார வாழ்த்துகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, செப்.10-**

**“நூறு ஆண்டுகள் கடந்தும் முழு நலத்துடன் வாழ அண்ணன் ஆர்.எம்.வீ. அவர்களை நெஞ்சார வாழ்த்துகிறேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முக நூலில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டிருப்பதாவது:-

எம்.ஜி.ஆர். கழகத்தின் நிறுவனரும், முத்தமிழறிஞர் கலைஞர் மீது அளவற்ற மதிப்பும், அன்பும் கொண்டவருமான அண்ணன் ஆர்.எம்.வீரப்பன் அவர்களுக்கு 98ஆவது பிறந்தநாள் வாழ்த்துகள்!

நம் பாசத்திற்குரிய ஆர்.எம்.வீ. அவர்கள் நூறு ஆண்டுகள் கடந்தும் முழு நலத்துடன் வாழ நெஞ்சார வாழ்த்துகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் கூறியுள்ளார்.

### அமைச்சர் சி.வெ.கணேசன் வரவேற்புரை!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நெய்வேலி சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. இல்லத் திருமண விழா!

### கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் - தோழமைக் கட்சித் தலைவர்கள் வாழ்த்து!

நெய்வேலி, செப். 10-

நெய்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சபா. இராசேந்திரன் - இரா அங்கையற்கண்ணி ஆகியோரின் புதல்வர் சபா. இரா.சுமந்த், அரிமா க.சாரங்கபாணி - செல்வராணி ஆகியோரின் புதல்வி சா.தனரஞ்சனி ஆகியோரின் மணவிழா நெய்வேலி ஆர்ச்கேட் அருகில் கலைஞர் திடலில் இன்று 10.9.2023 நடைபெறுகின்றது.

மணவிழாவிற்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று மணவிழாவினை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.



கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர்- அமைச்சர் சி.வெ.கணேசன் வரவேற்றுப் பேசுகிறார்.

மணமக்களை கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் எ.வ.வேலு, மு.க.தமிழரசு, தொ.மு.ச. பேரவைத் தலைவர் மு.சண்முகம் எம்.பி., ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ். அழகிரி, மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் கே.பால கிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவள வன், தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துகின்றனர்.

மேலும் இதன் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற, முன்னாள் - இந்நாள் உறுப்பினர்கள், குடும்பத்தினர், புதுச்சேரி சட்டமன்ற கழக உறுப்பினர்கள், கடலூர் மேற்கு மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் - கழக முன்னணி தோழர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

சபா.வெங்கடேசன், சபா.பாலமுருகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### 6 மாநிலங்களில் சட்டப் பேரவை இடைத்தேர்தல்:

# ‘இந்தியா’ கூட்டணி அபார வெற்றி!

### கேரளாவில் பா.ஜ.க. டெபாசிட் இழப்பு! உ.பி.யில் படுதோல்வி!

புதுடெல்லி, செப். 10-

நாடு முழுவதும் காலியாக இருந்த 7 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி 4 தொகுதிகளை கைப்பற்றியது. குறிப்பாக உபியில் பா.ஜ படுதோல்வி அடைந்துள்ளது. உத்தரகாண்ட் மாநிலத்தில் பாகேஷ்வர், உத்தரபிரதேசத்தில் கோசி, கேரளாவின் புதுப்பள்ளி, மேற்கு வங்கத்தில் துப்குரி, ஜார்கண்டில் தும்ரி, திரிபுராவின் போக்ஸாநகர் மற்றும் தன்பூர் ஆகிய சட்டசபை தொகுதிகள் காலியாக இருந்ததால் இந்த 6 மாநிலங்களில் உள்ள 7 தொகுதிகளுக்கும் கடந்த 5ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற்றது. இதற்கான ஓட்டு எண்ணிக்கை நேற்று நடந்தது.

உத்தரபிரதேச மாநிலம் கோசி தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்ட சமாஜ்வாடி வேட்பாளர் சுதாகர்சிங் 42,759 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் 1,24,427 ஓட்டுகளும், பா.ஜ வேட்பாளர் தாராசிங் சவுகான் 81,668 ஓட்டுகளும் பெற்றிருந்தனர். கடந்த ஆண்டு நடந்த தேர்தலில் சமாஜ்வாடி கட்சி சார்பில் வெற்றி பெற்றவர் தாராசிங் சவுகான். இவர் கடந்த ஜூலை மாதம் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு பா.ஜ.வில் சேர்ந்தார். ஆனால், இந்த முறை பா.ஜ.வில் வேட்பாளராக போட்டியிட்ட அவர் தோல்வியை சந்தித்தார். முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில் பா.ஜ. ஆட்சி நடைபெறும் உ.பியில் பா.ஜ. படுதோல்வியை சந்தித்துள்ளது அக்கட்சியினரை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

கேரள முன்னாள் முதல்வர் உம்மன் சாண்டி மறைவால் காலியான புதுப்பள்ளி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரும், உம்மன் சாண்டி மகனுமான சாண்டி உம்மன் வெற்றி பெற்றார். அவர் 37,719 ஓட்டு வித்தியாசத்தில் மார்க்சிஸ்ட் வேட்பாளர் ஜெய்க் சி தாமசை தோற்கடித்தார். சாண்டி உம்மன் 80,144 ஓட்டுகளும், ஜெய்க் சி தாமஸ் 42,425 ஓட்டுகளும் பெற்றனர்.

மேற்குவங்க மாநிலம் துப்குரி தொகுதியில் 2021ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் வென்ற பா.ஜ எம்.எல்.ஏ. பிஷ்ணு பதா ராய் ஜூலை 25ம் தேதி இறந்ததால் பா.ஜ வேட்பாளராக 2021ல் ஜம்முவில் தீவிரவாத தாக்குதலில் பலியான சி.ஆர்.பி.எப். வீரர் மனைவி தாப்சி ராய் நிறுத்தப்பட்டார். ஆனால் இந்த தேர்தலில் மம்தா தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளரும், கல்லூரி பேராசிரியருமான நிர்மல் சந்திரராய் 4313 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் 96,961 ஓட்டு பெற்றார். பா.ஜ வேட்பாளர் தாப்சி ராய் 92,648 ஓட்டுகளும், காங்கிரஸ் ஆதரவு பெற்ற மார்க்சிஸ்ட் வேட்பாளர் 13,666 ஓட்டுகளும் பெற்றனர். இதனால் பா.ஜ விடம் இருந்து துப்குரி தொகுதியை திரிணாமுல் தட்டிப்பறித்தது.

ஜார்க்கண்ட் மாநிலம் தும்ரி தொகுதியில் அமைச்சர் ஜாகர்நாத் மக்தோ மறைவால் நடந்த இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்ட ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா வேட்பாளரும், அமைச்சர் மக்தோவின் மனைவியுமான பெபி தேவி 17 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்தில் பா.ஜ. வேட்பாளர் யசோதா தேவியை வீழ்த்தினார். பெபி தேவி 1,35,480 ஓட்டுகளும், யசோதா தேவி 1,18,380 ஓட்டுகளும் பெற்றனர்.

**டெபாசிட் பறிகொடுத்த பா.ஜ.**

கேரளாவின் புதுப்பள்ளி தொகுதியில் கடந்த 2021ம் ஆண்டு நடந்த தேர்தலில் பா.ஜ. சார்பில் போட்டியிட்ட ஹரிக்கு 11,694 வாக்குகள் கிடைத்தன. ஆனால் இந்தத் தேர்தலில் போட்டியிட்ட லிஜின் லாலுக்கு 6,558 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. இவருக்கு இந்த தேர்தலில் 5.02 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளது. இதனால் அவரது டெபாசிட் பறிபோனது.




# ‘சுயமோட்டோ’: தவறான முன்னுதாரணமாகக் கூடாது!

தமிழ்நாட்டு கீழமை நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட பல தீர்ப்புகளை தானாக முன்வந்து மேல்முறையீடாக; அதாவது ‘சுயமோட்டா’வாக ஒரு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எடுத்து வருவது தொடர்கதையாகிறது. அமைச்சர் பொன்முடி, பின்னர் தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ஐ.பெரியசாமி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் வளர்மதி என ‘சுயமோட்டோ’ வழக்குகளின் நீட்சி நித்தம் பெருக்கெடுக்கிறது!

மேலே குறிப்பிட்டுள்ள வழக்குகள் எல்லாமே கீழமை நீதிமன்றங்கள் மாதக்கணக்கில் நடத்தி, பல தரப்பட்ட சாட்சியங்களை விசாரித்து, முடிவு எடுத்து தீர்ப்பு வழங்கப்பட்டவை! இவை அனைத்துமே ஒரே நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்குகள் அல்ல; பல்வேறு மாவட்டங்களில் பல நீதிமன்றங்களில் நடைபெற்றவை. இப்போது மேலே குறிப்பிட்டவர்கள் பெயரில் தொடுக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு, அந்தந்த நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டவர்களது வழக்குகளை உயர்நீதிமன்ற நீதிபதி மேல்முறையீடாக தானே முன்வந்து எடுப்பது; கீழமை நீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புகளின் நேர்மைத் தன்மையையும் அவர்களது சுயமரியாதையையும் கேள்விக்கும், கேலிக்கும் உட்படுத்துவதாகவே பலரால் கருதப்படுகிறது!

**அந்த உயர்நீதிமன்ற நீதிபதி அவருக்குரிய வரம்புக்குள் செயல்படுவதாக அவர் கருதினாலும், அவரது நடவடிக்கைகள் கீழமை நீதிமன்றங்களின் நீதிபதிகள் பலரது சுயமரியாதை உணர்வை சுட்டெரிப்பதாக உள்ளது!.**

அமைச்சர் பொன்முடியின் விவகாரத்தில், தனக்கு நிகராக உள்ள நீதிபதிகள் இருவர் பரிந்துரையுடனும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதலுடனும் எடுத்த நிர்வாக முடிவை, அதாவது வழக்கை விழுப்புரம் நீதிமன்றத்திலிருந்து வேலூருக்கு மாற்றிய முடிவையும் விமர்சனப் பார்வைக்கு உட்படுத்தினார்; அந்த நீதிபதி!

இதுபோன்று அந்த நீதிபதி தொடர்ந்து தெரிவிக்கும் கருத்துகள், செயல்பாடுகள். மற்றைய நீதிபதிகள் மனதினை எத்தனை வேதனைப்படுத்தியிருக்கும் என்பதை அவர் உணர்ந்து செயல்படுகிறாரா என்பது புரியவில்லை. அந்த சக நீதிபதிகள் மற்றும் கீழமை நீதிபதிகள் நீதிமன்றங்களின் மாண்பைப் பாதுகாத்திடும் நோக்கில் தங்களது மனப்புழுக்கத்தை தற்போது மனதிற்குள் போட்டு அடைத்து வைத்திருக்கலாம்; நிலைமைகள் இப்படியே தொடர்ந்தால், ஒருநாள் திடீரென அவர்கள் வெடிக்கக் கூடும்!



அப்படி எல்லாம் நிகழாது என்று எண்ணி தன்னைத்தானே யாரும் ஏமாற்றிக்கொள்ளக்கூடாது! அப்படி நடைபெற்றதுக்கு உதாரணம் உண்டு!

‘பொறுமைக்கும் எல்லை உண்டு’ என்ற நிலையில், கடந்த 2018-ஆம் ஆண்டு டெல்லியில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் நால்வர் திடீரென செய்தியாளர்களைச் சந்தித்து அந்த நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு எதிராக புகார்கள் கூறினர். அது ஒரு அசாதாரண நிகழ்வாகவே கருதப்பட்டது. உச்சநீதிமன்றத்தில், தலைமை நீதிபதி குறித்து அவர்கள் விமர்சிக்கும்போது கூறிய கருத்துகள். இப்போது தனது சக நீதிபதிகளையும், கீழமை நீதிமன்ற நீதிபதிகளின் தீர்ப்பை இன்று விமர்சிக்கும், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தனது கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்!

“சம அந்தஸ்து உடைய நீதிபதிகளில் முதன்மையானவர் தான் தலைமை நீதிபதி; அதைத் தவிர எதுவும் அதிகமான நிலையோ, குறைவான நிலையோ இல்லை என்பதை சட்ட இயல் (Jurisprudence) தெளிவாகத் தெரிவித்துள்ளது என்பதை அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் தெளிவாகக் கூறியுள்ளனர்.

“It is too well settled in the Juris prudence of this Country the Chief Justice is only first amongst the equals nothing more or nothing less”

**- மேற்கண்டவாறு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியையே விமர்சனத்துக்குள்ளாக்கியுள்ளனர்! இந்த நிலையில், நமது சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் சக நீதிபதிகளையும் கீழமை நீதிபதிகளையும் விமர்சிப்பதை தங்களது சுயமரியாதைக்கு விடப்பட்ட சவால் என்று அந்த நீதிபதிகள் போர்க்கொடி உயர்த்தத் தொடங்கினால் அது நீதித்துறையின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைச் சிதறடித்து விடாதா?**


> **கீழமை நீதிமன்றத் தீர்ப்புகளில் குறை கண்டு மேல்முறையீடாக, அவற்றை சுயமோட்டோவாக எடுத்தால் அது சிந்துபாத் கதைபோல முடிவற்றதாகக் கிளம்பும்! இந்த நீதிபதி எடுத்த முடிவை முன்னுதாரணமாகக் கொண்டு நாட்டின் மற்றைய உயர்நீதிமன்ற நீதிபதிகள் செயல்படத் தொடங்கினால் அதன் விளைவாக, கீழமை நீதிமன்றங்களால் பல வழக்குகளில் விடுவிக்கப்பட்ட பிரதமர், உள்துறை அமைச்சர், மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள பல முன்னாள், இன்னாள் அமைச்சர்கள் என ஏராளமானோர் சுயமோட்டோவில் சிக்குவர்!**

நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள், அது உச்சநீதிமன்றமாக இருந்தாலும் சரி, உயர்நீதிமன்றமாக இருந்தாலும் சரி, ஏன்; கீழமை நீதிமன்றங்களாக இருந்தாலும் சரி; அவை அனைத்தும் சாட்சியங்கள், சட்டங்கள், வழக்கறிஞர்களின் வாதங்களின் அடிப்படையில் அமைந்துவிடுகின்றன! தீர்ப்புகளில் திருப்தி கொள்ளாதவர்கள் பரிகாரம் தேடிட மேல்முறையீட்டுக்கு பல வாய்ப்புகள் உள்ளன!

பப்ளிக் இன்ட்ரஸ்ட் லிட்டிகேஷன், ஸ்பெஷல் லீவ் பெட்டிஷன்; ரெவ்யூ பெட்டிஷன், கியூரேட்டிவ பெட்டிஷன்- என பல முறையீடுகளுக்கு வழிவகைகள் உள்ளன. இந்த நிலையில் ‘சுயமோட்டோ’ வழக்கு என்பது, தங்களது பாதிப்புகளுக்கு நிவாரணம் தேட இயலாதவர்களுக்கு நீதிமன்றங்களே முன்வந்து நிவாரணமளிக்க உதவிடும் வகையில்தான் பொதுவாக இதுவரை இருந்துள்ளது.

இப்போது சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள்மீது எடுக்கப்பட்டுள்ள வழக்குகள் சட்டத்தின் சந்து பொந்துகளில் தேடி, அதன் மூலம் கிடைத்த இடத்தைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டுள்ளதாகவே சட்ட நிபுணர்கள் பலரும் கருதுகின்றனர்!

**கீழமை நீதிமன்றங்களில் பல ஆண்டு காலமாக, சாட்சியங்கள் சரியில்லா; அவர்கள் ஒத்துழைப்பு இல்லா சூழலிலோ பிறழ்சாட்சியங்களாக மாறிய நிலையிலோ குற்றம் சாட்டப்பட்டவர்கள் கீழமை நீதிமன்றங்களால் விடுதலையான நூற்றுக்கணக்கான வழக்குகள் உள்ளன! மறைந்த அம்மையார் ஜெயலலிதா மீது தொடுக்கப்பட்ட பல வழக்குகளில் இருந்து கீழமை நீதிமன்றங்கள் அவரை விடுவித்துள்ளன என்பதும், இன்று சுயமோட்டோ வழக்காக பல கீழமை நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பினை மேல்முறையீடாக எடுத்திடும் நீதிபதிக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை, இருந்தும் ஏன் அந்த உயர்நீதிமன்ற நீதிபதி சகட்டுமேனியாக கீழமை நீதிமன்றங்கள் வழங்கிய பல ஆண்டுகளுக்கு முன் வழங்கிய தீர்ப்பை மேல்முறையீட்டுக்கு எடுக்கிறார் என்பதை பலரும் பல கோணங்களில் நோக்குவது, அதனை நீடிக்கவிடுவது, நீதித்துறைக்கு நல்லதல்ல!**



சிலந்தி

இப்போது ‘சுயமோட்டோ’ மேல்முறையீடு வழக்காக, பல கீழமை நீதிமன்ற நீதிபதிகள் எடுத்த முடிவை விசாரிக்க முற்படும் நீதிபதியின் நேர்மைக் குணத்தை விட, ஒட்டுமொத்த நீதித்துறையின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவது முக்கியம்!

இப்படி அவர் கீழமை நீதிமன்றத் தீர்ப்புகளில் குறை கண்டு மேல்முறையீடாக, அவற்றை சுயமோட்டோவாக எடுத்தால் அது சிந்துபாத் கதைபோல முடிவற்றதாகக் கிளம்பும்! இந்த நீதிபதி எடுத்த முடிவை முன்னுதாரணமாகக் கொண்டு நாட்டின் மற்றைய உயர்நீதிமன்ற நீதிபதிகள் செயல்படத் தொடங்கினால் அதன் விளைவாக, கீழமை நீதிமன்றங்களால் பல வழக்குகளில் விடுவிக்கப்பட்ட பிரதமர், உள்துறை அமைச்சர், மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள பல முன்னாள், இன்னாள் அமைச்சர்கள் என ஏராளமானோர் சுயமோட்டோவில் சிக்குவர்!

பின்னர் நீதிபதியே குறிப்பிட்டுள்ள கடவுளாலும், இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாத நிலைதான் உருவாகும்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) சென்னையில் நடைபெற்ற கேரள மீடியா அகாடமியின் மீடியா மீட் 2023 நிகழ்ச்சியில், பிரபல பத்திரிகையாளர் பி.ஆர்.பி. பாஸ்கர் அவர்கள் எழுதிய "The Changing Mediascape என்ற புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, கேரள மாநில முன்னாள் கல்வி மற்றும் கலாச்சார விவகாரங்கள் துறை அமைச்சர் எம்.ஏ. பேபி, "The Changing Mediascape நூலாசிரியர் பாஸ்கர், ஏசியா நெட் மீடியா குழுமத்தின் நிறுவனர் சகிகுமார், டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழின் ஆசிரியர் அருண் ராம், சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், மலையாளம் மிஷன் தலைவர் டாக்டர் அனுப், கேரள மீடியா அகாடமியின் தலைவர் ஆர்.எஸ். பாபு, செயலாளர் திரு. சந்தோஷ், மலையாளி கிளப் தலைவர் என்.ஆர். பணிக்கர்,மெட்ராஸ் கேரளா சமாஜ் தலைவர் சிவதாசன் பிள்ளை, மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (08.09.2023) ஆணையர் அலுவலகத்தில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயில்களின் சொத்துகள் விவரம் அடங்கிய இரண்டாவது புத்தகத்தை வெளியிட்டார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ. சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, உயர்மட்ட ஆலோசனை குழு உறுப்பினர் திருமதி தேச மங்கையர்க்கரசி, தனி அலுவலர்கள் ஆலய நிலங்கள்) / மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி கோ.விஜயா, திருமதி சு.ஜானகி, த.குமரேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடும் - கேரளமும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் விடியலை ஏற்படுத்தித் தரவேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி

பத்திரிக்கையாளர்களுக்கு மிகப் பெரிய பாடமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அவசர நிலைக்காலம் குறித்த அவரது பதிவுகள் மிக முக்கியமானதாக உள்ளது. மிசாவில் கைதாகி ஓராண்டு காலம் சென்னை சிறையில் இருந்தவன் நான். எனவே அந்த உரிமையோடு இதை நான் இங்கே குறிப்பிட்டு காட்டியிருக்கிறேன்.

மனித உரிமைகள் மீதான பாஸ்கர் அவர்களின் ஆர்வம் இதன்மூலம் வெளிப்படுகிறது. இந்த துறைக்கு தான் வந்த காலத்தில் பெண் பத்திரிக்கையாளர்கள் குறைவாக இருந்தது குறித்து பதிவு செய்துள்ளார். ஆனால் இன்று ஏராளமான பெண் பத்திரிக்கையாளர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதையும் பார்க்கிறோம்.

மேலும், தலித் பத்திரிக்கையாளர்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாக இருக்கிறது என்ற அவரது ஆதங்கமானது சமூகநீதிக் குரலாக வெளிப்பட்டுள்ளது. இது ஓரளவு உண்மைதான்.

**ஒடுக்கப்பட்ட சமூக இளைஞர்களுக்கு அரசின் இதழியல் இலவச பயிற்சி!**

இதனை உணர்ந்துதான் ஒடுக்கப்பட்ட சமூகத்து இளைஞர்கள், அரசுப் பள்ளிகளில் படித்தவர்களில் இதழியல் ஆர்வம் கொண்டவர்களுக்கு இலவசமாக இதழியல் பயிற்சியை லயோலா கல்லூரியுடன் இணைந்து தமிழ்நாடு அரசு வழங்கியது.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற திராவிட மாடல் ஆட்சியின் நோக்கத்தை நான் சொல்லி வருகிறேன் என்றார். சமூகநீதி எந்தளவுக்கு பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்தும் மண்டல் ஆணையத்தின் பரிந்துரையை பிரதமர் வி.பி.சிங் அவர்கள் அமல்படுத்திய பிறகும் சமூக நீதிக்கு எத்தகைய தடைகள் விழுந்தன என்பதையும் இந்நூலில் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

> *அந்நிய நாட்டால் இந்தியாவுக்கு ஆபத்து வந்த காலம் அது. வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும் என்று விளக்கம் அளித்து இந்த நிலைப்பாட்டை எடுத்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். இதே போன்றுதான் இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு இன்று ஆபத்து வந்திருக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற தத்துவத்துக்கு ஆபத்து வந்திருக்கிறது. மதச்சார்பின்மைக்கு ஆபத்து வந்திருக்கிறது. சமூக நீதியை சிதைக்கப் பார்க்கிறார்கள். இவை அனைத்தையும் சிதைப்பதன் மூலமாக இந்தியாவை சிதைக்கப் பார்க்கிறார்கள். இதனை அரசியல் தளத்தில் அரசியல் இயக்கங்களாகிய நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.*

இத்தகைய சமூக நீதிக்காகத்தான் நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்பதை பாஸ்கர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நூலில் திராவிட முன்னேற்றக் கழகம் பற்றி ஏதாவது வருகிறதா என்பதை ஆர்வத்துடன் தேடிப் பார்த்தேன். பத்திரிக்கையாளர் பாஸ்கரிடம் 1957ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தைச் சார்ந்த ஒரு பெண்மணி கேட்டுள்ளார்.

**தி.மு.கழகம் குறித்து அன்றே பாஸ்கர் கணித்த கணிப்பு!**

"நீங்கள் தென்னகத்தில் இருந்து வருகிறீர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிச் சொல்லுங்கள்" என்று கேட்டிருக்கிறார்.

"1957 தேர்தலில் திமுக சிறப்பாக செயல்பட்டது. அவர்களது பணி தேர்தலோடு நின்றுவிடவில்லை. அதன் தொண்டர்கள் இப்போதும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள். இந்த வேகத்தில் தொடர்ந்து செயல்பட்டால், இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் அவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்று சொல்லி இருக்கிறார் பாஸ்கர் அவர்கள்.

அவர் சொன்னது போல பத்து ஆண்டுகளில் அதாவது 1967ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. தி.மு.க. மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்று பாஸ்கர் அவர்கள் சொன்னதை அந்த அதிகாரி ரசிக்கவில்லையாம். பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு கேட்டுக் கொண்டிருந்த காலம் அது. அதனை மனதில் வைத்து, 'தெற்கு பிரிந்து விடும் என்று சொல்கிறீர்களா?" என்று அவர் கேட்டிருக்கிறார். அந்த சிந்தனையிலும் மாறுதல் வரும் என்றும் பாஸ்கர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவரது தொலைநோக்கு சிந்தனையை இதன் மூலமாக அறியலாம்.

இந்தியாவைக் காப்பாற்றுவதற்காக, இந்தியாவின் பாதுகாப்பே முக்கியம் எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டார்கள்.

அந்நிய நாட்டால் இந்தியாவுக்கு ஆபத்து வந்த காலம் அது. வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும் என்று விளக்கம் அளித்து இந்த நிலைப்பாட்டை எடுத்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். இதே போன்றுதான் இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு இன்று ஆபத்து வந்திருக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற தத்துவத்துக்கு ஆபத்து வந்திருக்கிறது. மதச்சார்பின்மைக்கு ஆபத்து வந்திருக்கிறது. சமூகநீதியை சிதைக்கப் பார்க்கிறார்கள். இவை அனைத்தையும் சிதைப்பதன் மூலமாக இந்தியாவை சிதைக்கப் பார்க்கிறார்கள். இதனை அரசியல் தளத்தில் அரசியல் இயக்கங்க ளாகிய நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

இந்தியாவைக் காப்பாற்றும் பணியில் ஊடகங்களும் தங்களது பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மலையாள சொந்தங்களுக்கு எனது வேண்டுகோள்!**

ஆட்சிப்பொறுப்பிற்கு வந்தபிறகு 'இந்திய அரசியலமைப்புச் சட்டம் தான் என்னுடைய வேதம்' என்று சொல்லி நாடாளுமன்றத்தையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் வணங்கியவர் பிரதமர். இப்போது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராகவே செயல்பட்டு கொண்டிருக்கிறார். இதனை நாட்டிலுள்ள அனைத்து மக்களும் உணர்ந்து இந்த போக்கை எதிர்க்க வேண்டும்.

இங்கு கூடியிருக்கும் எனது மலையாள சொந்தங்களுக்கும் கேரளத்தில் வாழக்கூடிய சொந்தங்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது, தமிழ்நாடும் கேரளமும் நாட்டைக் காக்கின்ற முயற்சியில் இரட்டைக்குழல் துப்பாக்கியாக செயல்பட்டு ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் விடியலை ஏற்படுத்தித் தர வேண்டும். அதே போல் ஊடகங்களும், பொய்பரப்புரைகளுக்கும் திசை திருப்புபவர்களுக்கும் முக்கியத்துவம் தராமல் விடுதலைப் போராட்டக் காலத்தில் செயல்பட்டதைப் போல மீண்டும் செயல்பட வேண்டும் என்று கேட்டு இந்த சிறப்பான நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற வாய்ப்பினை பெற்றமைக்காக நான் மீண்டும் ஒரு முறை எனது இதயபூர்வமான நன்றியை, வணக்கத்தை தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# ரூ.5,171 கோடி -அறநிலையத்துறை மீட்ட சொத்து விவரம்!

## இரண்டாவது புத்தகத்தை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டார்!

*சென்னை, செப். 10-*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி, நேற்று முன்தினம் (08.09.2023) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க ப்பட்ட திருக்கோயில்களின் சொத்துகள் விவரம் அடங்கிய இரண்டாவது புத்தகத்தை வெளியிட்டார்.

பின்னர், அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றபின், பல்வேறு நிலைகளில் திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பில் இருப்பதை அகற்றிட வேண்டும் என்று உத்தரவிட்டதற்கிணங்க, மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 07.05.2021 முதல் 31.03.2022 வரை முதற்கட்டமாக 167 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.2,566.94 கோடி மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப்பட்டு, அதுகுறித்த முதல் புத்தகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, இன்று வெளியிடப்பட்டுள்ள இரண்டாவது புத்தகத்தில் 01.04.2022 முதல் 31.03.2023 வரையிலான காலத்தில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட 330 திருக்கோயில்களுக்குச் சொந்தமான ரூ.1,692.29 கோடி மதிப்பிலான 3386.06 ஏக்கர் நிலம், மனை, கட்டடம் மற்றும் திருக்குளம் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 07.05.2021 முதல் நேற்று (07.09.2023) வரை 653 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.5,171 கோடி மதிப்பீட்டிலான 5,721.19 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு ள்ளன. நவீன தொழில்நுட்ப கருவியான DGPS ரோவர் கருவி மூலம் 1,48,956.20 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்து பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த அளவீடு பணி 1.50 இலட்சம் ஏக்கரை எட்டும் நிகழ்வினை தர்மபுரியில் சிறப்பாக நடத்தவுள்ளோம். மேலும், ஆக்கிரமிப்புகளை மீட்டெடுத்தது குறித்த மூன்றாவது புத்தகம் வரும் ஜனவரி 2024 க்குள் வெளியிடப்படும். இந்து சமய அறநிலையத்துறையை பொறுத்தளவில் ஆக்கிரமிப்புகளை மீட்டெடுக்கும் பணி தொடரும்.

ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து ஏற்கனவே அவர் ஆக்கிரமித்து வைத்ததற்கு உண்டான வாடகை வசூலிப்பது, அவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடர்வது போன்ற தொடர் நடவடிக்கைகளை காவல் துறையினரோடு ஒருங்கிணைந்து அந்தந்த மண்டல இணை ஆணையர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட புகார்கள் காவல் துறையிடம் அளிக்கப்பட்டு இருக்கின்றன.

ஆக்கிரமிப்பு என்று தெரிந்தவுடன் உடனடியாக அவரை அப்புறப்படுத்துவதற்கு இணை ஆணையர் நீதிமன்றத்தில் சட்டப்பரிவு 78ன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. அந்த வழக்கிற்கு மேல்முறையீடாக ஆணையரிடத்தில் மனு செய்கிறார்கள். அதனைத் அடுத்து துறை செயலாளரிடம் செல்கிறார்கள். இப்படி எல்லா நிலையையும் கடந்த பிறகு தான் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நிலங்களை மீட்கப்பட வேண்டிய சூழ்நிலை இருப்பதால் சற்று காலதாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும் அதனையும் முறையாக விரைவுப்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நிலங்களை மீட்கின்ற முயற்சியில் துறை வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவ்வாறு ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட சொத்துக்கள் முறையாக ஏலம் விடப்பட்டு அதன் வருவாய் திருக்கோயிலின் மேம்பாட்டிற்கு செலவிடப்படுகிறது. இந்து சமய அறநிலையத்துறைக்கு திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிக்கின்ற எண்ணமும் இல்லை, அதனால் எந்த விதமான நன்மையும் கிடைக்கப் போவதுமில்லை.

கடந்த 12 ஆண்டுகளாக திருக்கோயில்களுக்கு வரப்பெற்ற பலமாற்று பொன்னினங்களில் பயன்பாடற்ற பொன்னினங்களை ஓய்வுப் பெற்ற நீதியரசர்களின் முன்னிலையில் கணக்கெடுத்து ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி அந்தந்த திருக்கோயில்களின் பெயரில் தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்யப்பட்டு அதன் வட்டித்தொகை திருக்கோயிலின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயி லுக்கு வட்டித்தொகையாக ஆண்டிற்கு ரூ.2.25 கோடியும், இருக்கன்குடி, பெரியபாளையம், திருவேற்காடு மற்றும் மாங்காடு திருக்கோயில்களுக்கு வட்டித்தொகையாக ஆண்டிற்கு ரூ.2.06 கோடியும் கிடைக்கப்பெறுகிறது. இப்படி திருக்கோயிலுக்கு வருமானங்களை பெருக்குகின்ற வகையில் எத்தகைய தடை வந்தாலும் உடைத்தெறிந்து இந்து சமய அறநிலையத்துறை செயலாற்றி வருகிறது.

ஆன்மிகத்தை வைத்து தமிழக மண்ணில் அரசியல் செய்யலாம் என்று நினைத்த சிலருக்கு அது கை கூடவில்லை. இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு 2 ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. வரும் 10 ஆம் தேதி நடைபெறும் மேற்கு மாம்பலம், காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு 1,000 ஆவது குடமுழுக்காகும். திராவிட முன்னேற்ற கழக ஆட்சி என்றாலே ஆன்மிகத்தின் பக்கம் நாட்டம் இருக்காது என்ற பிரச்சாரத்தை அடித்து நொறுக்கி தவிடு பொடியாக்கி தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்து சமய அறநிலைத்துறையில் இதுவரை இல்லாத புதுப்புது திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தி கொண்டிருக்கிறார். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 7,142 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள மாநில வல்லுநர் குழுவால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்படி எங்கு பார்த்தாலும் ஆன்மிகத்தில் ஒரு புரட்சியையும், இறையன்பர்களுக்கு பெரும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தி குடமுழுக்கு நடைபெறாமல் இருந்த 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையான திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்திட முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நிதியாண்டும் ரூ.100 கோடி அரசு மானியமாக வழங்கினார்கள். அந்த நிதி மற்றும் உபயதாரர்களின் பங்களிப்போடு ரூ.300 கோடி அளவிற்கு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு சிலர் ஏற்படுத்தும் தடைகளால் எங்களுடைய பயணம் ஒருநாளும் தடைப்படாது. முன்பைவிட அதிவேகத்தோடு பணியாற்றிடுவோம்.

அமைச்சரவை பதவியேற்றபின்போது அனைவருக்கும் ஒரே மாதிரியான உறுதிமொழிதான். ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு உறுதிமொழி என்று இல்லை. எந்த வகையிலும் அரசியல் சாசன சட்டத்தை மீறுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. எங்களுடைய தலைவர்களும் எங்களுக்கு அரசியல் சாசன சட்டத்திற்கு உட்பட்டு தான் செயல்பட வேண்டும் என்று போதித்திருக்கின்றார். ஆகவே எங்களுடைய கோட்பாடுகள், கொள்கை மற்றும் லட்சியங்களிலிருந்து ஒருநாளும் பின்வாங்க மாட்டோம், கட்டுப்பாட்டுக்குள் தான் செயல்படுவோம். ஆகவே எங்கும் அரசியல் சாசன உறுதி மொழியை மீறுகின்ற சூழ்நிலை ஏற்படவும் இல்லை, அப்படி நடந்து கொள்ளவும் மாட்டோம்.

நாங்கள் கருத்தியல் ரீதியான மோதலுக்கு தயாரானவர்களே தவிர இது போன்ற தேவையற்ற வாதங்களுக்கு எங்களை நாங்கள் ஆட்படுத்திக் கொள்வதில்லை. அண்ணாமலைக்கு அவர்களின் பெயரில் இருக்கின்ற ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு உதாரணத்தை கற்பிக்க முடியும். ஆனால் எங்களின் பணி அது அல்ல நாங்கள் மக்களை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறோம்.

சனாதனம் என்பது வேறு, இந்து மதம் என்பது வேறு. நான் இரண்டு நாட்களுக்கு முன்பு கூட இதற்கு வாழைப்பழத்தை உதாரணமாக சொன்னேன். சனாதனத்தில் இருக்கின்ற பெண் கல்வி மறுப்பு, கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறுதல், பெண்களுக்கு எதிரான சமூகநீதி இவைகளை தான் நாங்கள் எதிர்க்கிறோமே தவிர சனாதனத்தை ஏற்றுக் கொண்டவர்களை எல்லாம் நாங்கள் எதிர்ப்பதாக அர்த்தமாகாது. ஆகவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளியாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தெளிவான அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்கள். அதுவே போதுமானது. வேலையற்ற வீணர்களின் வார்த்தைகளுக்கு பதில் சொல்லிக்கொண்டு எங்களுடைய நேரத்தை நாங்கள் செலவிட விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, உயர்மட்ட ஆலோசனை குழு உறுப்பினர் திருமதி தேச மங்கையர்க்கரசி, தனி அலுவலர்கள் (ஆலய நிலங்கள்) / மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி கோ.விஜயா, திருமதி சு. ஜானகி, த.குமரேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எம்.கே.பி.அண்ணாதாசன் தலைமை! ஆ.மாலினி எம்.சி. முன்னிலை!

# முகப்பேர் பி.சுந்தரராஜன் - எஸ். ரத்தினம் இல்ல மணவிழா வரவேற்பு!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ.-ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., - நொளம்பூர் வே. ராஜன் வாழ்த்துரை!

*சென்னை, செப். 10-*

சென்னை முகப்பேர் மேற்கு பி. சுந்தரராஜன் - எஸ். ரத்தினம் ஆகியோரது புதல்வி எஸ். சந்தானலட்சுமிக்கும் ஜி.வாசுதேவன் எஸ்.அஞ்சலிதேவி ஆகியோரின் புதல்வர் வி.விக்னே சுக்கும் மணவிழா வரவேற்பு இன்று (10.09.2023-ஞாயிறு) மாலை 7 மணியளவில் முகப்பேர் மேற்கில் அமைந்துள்ள தங்கமணி மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா நாளை (11.9.2023 - திங்கள்) காலை 6 மணியளவில் பம்மல் சங்கர் நகரில் உள்ள ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்பன் கோவிலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்புக்கு வட்டச் செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசன் தலைமை வகிக்கிறார்.

டி.தாமோதரன், பி. ராஜேந்திரன், எம்.செல்வகுமார், ஏ.அப்பாசாமி, எஸ். கஜலட்சுமி ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஆ.மாலினி எம்.சி.ஆர். ரசூல்தீன், ஆர். ராக்கேஷ், ஆர்.அமுதா ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., நெளம்பூர் வே. ராஜன் எம்.சி., பி.கே. மூர்த்தி எம்.சி. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும், கே. குமரேசன், எம்.கே. செந்தில் சுரேஷ், தீ.பாலாஜி, எம்.உதயகுமார், எம்.கி.சேகர், கே.வி. திலகர் எம்.சி., எல்.பி.எப். மோகன், ப.ஆலன், எம்.எம். ஜெ.ரத்தினம், எஸ்.ஜி.மாதவன், சி.சசிகுமார், எம். இ.ஸ்டாலின் எம்.சி., எம். ரூபன், எம்.சி. எழிலரசு, பி.வி. தமிழ்ச்செல்வன், டாக்டர் எம்.சி. அழகிரி உள்ளிட்ட 91வது வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எஸ்.செண்பகராஜ் நன்றி கூறுகிறார்.

## தஞ்சை மத்திய மாவட்டம்

# தஞ்சை மாநகரம்,18, 47, 46 ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம், கோட்டை பகுதி, 18வது வட்டக் கழகச் செயலாளர் எம்.கண்ணன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. ஆர். அமர்நாத்**, (45/1350, மேல அலங்கம், தஞ்சாவூர்) அவர்கள், 18வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

மருத்துவக் கல்லூரி பகுதி, 47வது வட்டக் கழகச் செயலாளர் டி.சுந்தர்ராஜ் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. அ. நிமல்பிரசாத்,** (9/4, 2வது தெரு, சுப்ரமணியபுரம், எம்.சி.சாலை, தஞ்சாவூர் - 4) அவர்கள் 47வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்; 46வது வட்டக் கழகச் செயலாளர் பூமிநாதன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. ஜி.முத்துகுமாரசாமி,** (3, முதல் தெரு, ஸ்ரீராம்நகர், ஈஸ்வரி நகர், எம்.சி.சாலை, தஞ்சாவூர் - 613 004) அவர்கள், 47வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8.9.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## எல்லோரும் என்றும் சுயமரியாதையோடு வாழ

# பெரியார் கண்ட கனவை நிறைவேற்ற பாடுபடுவீர்!

### கோவில் பட்டியில் “மாபெரும் தமிழ்க் கனவு” பரப்புரை நிகழ்ச்சியில் மாணவ - மாணவியர்க்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. வேண்டுகோள்!

**கோவில்பட்டி, செப்.10–**

**“எல்லோரும் என்றும் சுயமரியாதையோடு வாழ பெரியார் கண்ட கனவை நிறைவேற்ற பாடு படுவீர்” என்று கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற மக்களவை கழ கக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கோவில் பட்டியில் நடை பெற்ற “மாபெரும் தமிழ்க்கனவு - தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை” நிகழ்ச்சி யில் உரையாற் றும்போது மாணவ-மாணவிகளுக்கு வலியு றுத்தினார்.**

08.09.2023 அன்று தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள ஜி.வெங்கடசாமி நாயுடு கல்லூரியில், தமிழ் இணையக் கல்விக்கழகம் சார்பில், ஜி.வி.என்.கல்லூரி, கே.ஆர்.கல்லூரி, உண்ணாமலை கல்லூரி, அரசுக் கல்லூரி, SSD கல்லூரி மாணவ மாணவிகள் கலந்துகொண்ட “மாபெரும் தமிழ்க் கனவு தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை” நிகழ்ச்சியில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், திமுக துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் கழக துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, மாணவ மாணவிகளின் கேள்விகளுக்கு பதிலுரை வழங்கினார்!

கனிமொழி எம்.பி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“இன்று உலக எழுத்தறிவு நாள். இந்த நாளிலே மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி. மாபெரும் தமிழ்க் கனவு என்றால் என்ன? மாணவ மாணவிகளை சந்தித்து உரையாடும் நிகழ்வுக்கு இந்த பெயர் ஏன் வைக்கப்பட்டிருக்கிறது?

மாபெரும் தமிழ்க் கனவு என்ற தலைப்பில் பேரறிஞர் அண்ணாவைப் பற்றி அழகான ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. அண்ணாவை பற்றி மற்றவர்கள் எழுதியிருக்கக் கூடிய கட்டுரைகள், பேச்சு, செயல்பாடுகளின் தொகுப்பு அது.

தமிழ்நாட்டில் இரண்டே இரண்டு ஆண்டுகள் முதலமைச்சராக பணியாற்றிய ஒரு தலைவர், மிகப்பெரிய குடும்பத்தில் பிறக்காமல் ஏழ்மை சூழ்ந்த மிகச் சாதாரண குடும்பத்திலே பிறந்த ஓர் இளைஞர், தன் வாழ்நாளெல்லாம் புத்தகங்களை நேசித்த ஒரு மனிதர், தன் வாழ்க்கையை எப்படி செதுக்கி, தமிழ்நாட்டின் கனவுகளை செதுக்கி, இன்று வரை இந்த நாட்டில் இருக்கக் கூடிய அறிவு ஜீவிகள் எல்லாம் போற்றக் கூடிய, இன்றும் பாராளுமன்றத்திலே அவரது பேச்சுகளை மேற்கோள் காட்டக் கூடிய அளவுக்கு ஒரு மனிதரால் தமிழகத்தின் கனவுகளை கட்டி எழுப்ப முடிந்தது என்றால் அவர்தான் பேரறிஞர் அண்ணா.

**பேரறிஞர் அண்ணாவின் கனவுகள்!**

அந்த பேரறிஞரைப் பற்றி அவருடைய கனவுகளைப்பற்றி நாம் பேசும்போதுதான்... தமிழகத்தின் கனவுகளையும் இங்கே இருக்க கூடிய மாணவர்களின் கனவுகளையும் ஒன்றிணைக்கக் கூடிய ஒன்றாக இந்த மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியை நம்முடைய முதலமைச்சர் உருவாக்கியிருக்கிறார்.

தமிழ்நாடு எப்போதுமே எழுத்தை, கல்வியைக் கொண்டாடக் கூடிய ஒரு மாநிலமாக திகழ்கிறது. இன்றைய மாணவர்களாகிய நீங்கள் எந்த செய்தியையும் செல்போன், சோஷியல் மீடியா மூலமாக உடனக்குடன் தெரிந்துகொள்ள வாய்ப்புடையவர்களாக இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட நிலையில் உலகின் மற்ற நாடுகளுடைய பண்பாடுகள், நாகரிகங்கள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் படிக்கக் கூடிய தெரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. அப்படித்தேடும்போது உலகின் எந்த மொழியிலாவது எந்த நிலப்பரப்பிலாவது, எந்த பண்பாட்டிலாவது கல்வியை தமிழ் மக்கள் கொண்டாடியதுபோல் கொண்டாடியிருக்கிறார்களா என்றால் இல்லை.

ஏனென்றால் எல்லா இடங்களிலும் கல்வி என்பது மேட்டுக்குடியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான். ஒரு காலத்தில் ஆங்கிலேயர்கள் வருகைக்குப் பின் சில உயர் குடிகளுக்கு தான் கல்வி என்ற நிலை உருவாகியது.

அதற்கு முன்னால் இருந்தே தமிழர்கள் இந்த மண்ணில் இருக்கக்கூடியவர்கள் கல்வி என்பது அறிவு என்பது எழுத்து என்பது எல்லோருக்கும் போய் சேர வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்களாக வாழ்ந்திருக் கிறார்கள்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்றார் ஔவையார். குறிப்பிட்ட சிலருக்கு தான் எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று சொல்லவில்லை. எல்லோருக்குமே எண்ணும் எழுத்தும் கண் என்று சொன்னார் ஔவையார். வள்ளுவரும் இதேதான் சொல்கிறார். கல்வி என்ற கண் இருக்கு மட்டும் தான் என்று தமிழ் கூறவில்லை. அனைத்து மனிதர்களுக்கும் கல்வி என்பது கண். எல்லோருக்கும் கல்வி வேண்டும். கல்வி இல்லை என்றால், எழுத்தறிவு இல்லை என்றால் கண் இல்லை. அது



புண் என்று சொல்லக்கூடிய அளவுக்கு கல்வியை கொண்டாடிய மண்தான் தமிழ்நாடு.

இங்கே நமது மாவட்ட ஆட்சித் தலைவர் பேசும்போது சொன்னார். மார்க்கோபோலோ இங்கே 1292ல் வந்த போது மக்கள் எவ்வளவு சீரும் சிறப்போடும் நாகரிகத்தோடும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டு எழுதி இருக்கிறார் என்று இங்கே பேசும்போது சொன்னார்.

1610 ஆம் ஆண்டு ராபர்ட்டோ டி நோபிலி என்ற பாதிரியார் மதுரைக்கு வந்தார். அப்போது அவர் என்ன எழுதுகிறார் என்றால் இங்கே இருக்கக்கூடிய மனிதர்களுக்கு கல்வி அறிவு இல்லை, எல்லோரும் பண்ணையில் அடிமைகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள், தமிழ் மக்களுக்கு உரிமை இல்லை அடிமைகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். சிலருக்கு மட்டும் தான் இங்கே பாடசாலைகள் இருக்கின்றன. அவர்களும் சமஸ்கிருத கல்வியை மட்டுமே பயின்று கொண்டிருக்கிறார்கள் என்று 1610 இல் வந்த ராபர்ட்டோ எழுதுகிறார். இதிலிருந்து நமது மேம்பட்ட கல்வி, நமது மேம்பட்ட நாகரிகம் ஆகியவை கொஞ்சம் கொஞ்சமாக தொலைந்து போய் இருக்கிறது என்பது தெரிகிறது.

கீழடியிலே ஓர் அழகான அருங்காட்சியகத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கி இருக்கிறது. கீழடி அகழ்வாராய்ச்சி என்பது எவ்வளவு போராட்டத்திற்குப் பிறகு தொடர்ந்து நடைபெற்றது என்பது உங்களுக்கு தெரிந்திருக்கும். அங்கே அகழ்வாராய்ச்சியை தொடர்ந்து நடத்தக் கூடாது என்று பல தடைகள் வந்தன. அதையெல்லாம் மீறி தான் அங்கே அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. அந்த கீழடி அருங்காட்சியகத்தில் நீங்கள் சென்று பார்த்தீர்கள் என்றால் நம்முடைய பானை ஓடுகளிலே எழுத்து இருக்கிறது.

2600 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த தமிழி என்ற நம்முடைய எழுத்துமுறை இருந்திருக்கிறது. இதுவரைக்கும் இந்தியாவிலேயே தொன்மையான எழுத்து வடிவம் என்பது அசோகர் காலத்திலே இருந்தது தான் என்று சொல்லுவார்கள்.

ஆனால் நம்முடைய தமிழ் எழுத்து வடிவம் என்பது அதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லாமல்... அது வேறு நாம் வேறாக இருந்திருக்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்குஒருதனித்துவமானதமிழ்வடிவம்எழுத்து வடிவம் நம்மிடம் இருந்து இருக்கிறது.

**அனைவருக்கும் கல்வி என்று வாழ்ந்தவன் தமிழன்!**

கல்வெட்டிலே அரசர்கள் தான் அதிகம் எழுதியிருக்கிறார்கள். தங்களது ஆட்சியைப் பற்றி தங்களது பெயரை பற்றி எழுதச் செய்வார்கள். ஆனால் பானை ஓட்டில் சாதாரண இடங்களில் சாமானிய மனிதர்கள் எழுதுகிறார்கள் என்றால் எந்த அதிகாரமும் வைத்துக் கொண்டு இருக்காதவர்கள். அவர்களுக்கும் எழுத்து தெரிந்திருக்கிறது என்றால்... சாதாரணமாக சின்ன ஊரில் கிடைக்கக்கூடிய பானை ஓட்டில் கூட எழுத்துக்கள் இருந்தது என்றால் கல்வி என்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய ஒன்றாக தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்ற பெருமையுடைய மாநிலம் தான் தமிழ்நாடு. வேறு எங்கும் இதுபோல இல்லை.

சிலர் மட்டும்தான் படிக்க வேண்டும். மற்றவர்கள் படித்தால் அவர்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று என்று சொல்லக்கூடியவர்கள் இருந்த நிலையிலே... அனைவருக்கும் கல்வி என்று அப்போதே வாழ்ந்தவன் தமிழன். இந்தப் பெருமை நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

**கீழடி அகழ்வாராய்ச்சிகளை பார்த்தீர்களா?**

கீழடியில் நடக்கக்கூடிய அகழ்வாராய்ச்சிகளாக இருக்கட்டும்... கொற்கையில் நடக்கக் கூடிய அகழ்வாராய்ச்சிகளாக இருக்கட்டும்... ஆதிச்சநல்லூரில் நடக்கக்கூடிய ஆய்வுகள் இவற்றையெல்லாம் நீங்கள் போய் பார்க்க வேண்டும். உங்களில் எத்தனை பேர் போய் இவற்றையெல்லாம் பார்த்து இருக்கிறீர்கள்? (பலரும் பாக்கவில்லை என்கிறார்கள்). எத்தனை பேர் ஜெயிலர் பார்த்தீர்கள்?” என்று கேட்க அரங்கத்தில் சிரிப்பொலி.

“நீங்கள் படங்கள் பார்க்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அதே நேரத்தில் இங்கே தான் இருக்கின்றன நம்முடைய கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகங்கை.

நம்முடைய முன்னோர்கள் எப்படி வாழ்ந்திருக்கிறார்கள் என்பது பற்றிய ஆச்சரியமான விஷயங்களை அங்கே நாம் பார்க்க முடியும். இன்டர்நெட்டில் நாம் பார்க்கிற சுவாரசியமான விஷயங்களை விட மிக சுவாரசியமான விஷயங்களை இத்தகைய அகழ்வாராய்ச்சிகளிலே நாம் தெரிந்து கொள்ள முடியும்.

இப்போது தண்ணீர் கொண்டு வருவதற்கான பைப் போட்ட உடனே கூட உடைந்து விடுகிறது. ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் தண்ணீர் கொண்டு வருவதற்காக அமைத்த குழாய்கள் இன்னமும் உடையாமல் எந்த பிரச்சினையும் இல்லாமல் அங்கே கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நமக்கு எப்படிப்பட்ட திறமைகள் இருந்திருக்கின்றன என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள முடியும்.

இங்கே வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும் போது பல்வேறு நிறுவனங்கள் இங்கே வந்து அந்த முகாம்களில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும். ஆனால் நம்முடைய மாணவர்கள் அப்பாவை விட்டு போக மாட்டேன் அம்மாவை விட்டு போக மாட்டேன் என்று சொல்கிறார்கள். இப்போதெல்லாம் நேருக்கு நேர் பார்த்து கொண்டு பேசக் கூடிய அளவுக்கு செல்போன்கள் இருக்கின்றன. நினைத்த நேரத்தில் ரயிலை பிடித்து ஊருக்கு ஓடி வந்து விடலாம். ஆனால் நாம் வெளியே செல்வதற்கு எவ்வளவு சிந்திக்கிறோம்?

ஆனால் அன்றைக்கு தமிழ்நாட்டிலே இருந்து எகிப்திலே போய் வியாபாரம் செய்திருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய மனிதர்கள் இங்கே வந்து வாழ்ந்திருக்கிறார்கள். அப்படி என்றால் அன்றைய தமிழர்களின் புதிய விஷயங்களை எதற்கும் அச்சப்படாமல் தேடக்கூடியதில் இருந்த ஆர்வம் நம்மை உருவாக்கி இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**தலைமுறை தாண்டி சிந்தித்த தமிழர்கள்!**

இங்கே எல்லாருக்கும் எல்லாம் எல்லோரும் சமம் என்பதுதான் தமிழ்நாட்டின் நியதியாக இருந்திருக்கிறது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது தான் தமிழ் மண் சொல்கிற கலாச்சாரம்.

இன்று காலநிலை மாற்றத்தை பற்றி சொல்லி வருத்தப்பட்டு கொண்டிருக்கிறோம். காலநிலை மாற்றம் மனிதர்கள் உட்பட எல்லா உயிரினங்களையும்அழித்துக்கொண்டு இருக்கிறது. விலங்குகள், மீன்கள், கடல் வாழ் உயிரினங்கள் இவற்றையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டிருக்கிறது.

இந்த அச்சம் ஒவ்வொருவருடைய மனதிலும் இருக்கக்கூடிய சூழ்நிலையிலே, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொல்லி எல்லா உயிர்களையும் மதிக்கக் கூடிய அளவுக்கு... தலைமுறைகளை எல்லாம் தாண்டி சிந்தித்தவர்கள் தான் தமிழர்கள். அவர்கள் வழியிலே தான் நாம் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் உருவாக்கிய அந்த அறிவு, புரிதல் இதெல்லாம் நம்மை வழி நடத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு மட்டும் எப்படி வித்தியாசமாக சிந்திக்கிறது என்ற ஒரு கேள்வி பலருக்கு தொடர்ந்து எழுந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் தொன்மையான காலம் காலமாக... நமது சிந்தனைகள் எல்லோருக்குமானதாக இருந்து கொண்டிருக்கிறது.

யாரையும் நீ வேண்டாம், நீ விலகி, இரு உன்னை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்லாத ஒரு பண்பாடாக... ஒரு நாகரிகமாக ஒரு இனமாக தமிழ் இனம் வாழ்ந்திருக்கிறது. அதனால்தான் நாம் இந்திய தேசம் தொடக்கூடிய எல்லைகளை முன்கூட்டியே தாண்டி இருக்கக் கூடியவர்களாக நாம் உருவாகி இருக்கிறோம்.

ராபர்ட்டோ அடிமைகளாக இருக்கிறார்கள் என்று சொன்ன தமிழ்நாட்டில் கல்வி வளம் பெற்ற ஒரு தமிழ்நாடாக இன்றைக்கு உயர் கல்வியிலே மிகச்சிறந்த இடத்தை பெற்றிருக்க கூடிய தமிழ்நாடாக இன்று மாறியிருக்கிறது என்றால் அதற்கான வரலாறை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**கி.ரா.வின் ‘கதவு’கதை!**

கோவில்பட்டியைச் சேர்ந்த எழுத்தாளர் கி ராஜநாராயணனை உங்களுக்கெல்லாம் தெரிந்து இருக்கும். எல்லோராலும் கொண்டாடக் கூடிய எழுத்தாளர் அவர். அவருடைய கதவு என்ற சிறுகதையிலே இரண்டு குழந்தைகள் இருப்பார்கள். அவர்கள் வீட்டில் ஒரு கதவு இருக்கும். வசதியே இல்லாத குடும்பம். அம்மா தினமும் கூலி வேலைக்கு போவார். அப்பா வெளியூரில் வேலை செய்கிறார். இந்த ரெண்டு குழந்தைகளும் வீட்டில் கதவில் ஏறி விளையாடுவது தான் தினசரி அவர்களுடைய பொழுதுபோக்கு. டிவி எல்லாம் அப்போது இல்லை.

கதவில் ஏறி ஏறி விளையாடி... டிக்கெட் போட்டு உன்னுடைய ஸ்டேஷன் வந்துருச்சு... என்னுடைய ஸ்டேஷன் வந்துருச்சு என்று சொல்லி விளையாடி அந்த கதவோடு அவர்களுடைய வாழ்க்கை ஒன்றிணைந்து இருந்தது.

இந்த நேரத்தில் தான் அவர்கள் வரி செலுத்தவில்லை என்று சொல்லி நான்கு பேர் வந்து அந்த கதவை கழட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். இப்போது அந்த வீட்டில் கதவு இல்லை. குழந்தைகள் வருத்தமாக இருக்கிறார்கள்.

ஒரு நாள் தம்பி மாலையில் வந்து சாப்பாடு கொடு என்று தன் அக்காவிடம் கேட்கிறான். அக்காவும் குழந்தைதான். சாப்பாடு இல்லை என்று சொல்கிறாள். காலையிலே கஞ்சி காய்ச்சினோமே எங்கே என்று கேட்கிறான்.

கஞ்சி வச்சிருந்தேன். நம்ம வீட்டுல கதவு இல்லாததால நாய் வந்து குடிச்சிட்டு போயிடுச்சு என்று அவள் சொல்கிறாள். அவன் பசியோடு தூங்க செல்கிறான்.

கதவு இல்லாததால் வாடைக்காற்று வீட்டுக்குள்ளே வருகிறது. கைக்குழந்தைக்கு அந்த காற்றால் பாதிக்கப்பட்டு ஜுரம் வந்து விடுகிறது. வைத்தியம் பார்க்க முடியவில்லை அந்த குழந்தை இறந்து விடுகிறது. அவர்களுடைய வாழ்க்கையே மாறி விடுகிறது.

ஒரு நாள் அந்த தம்பி அக்காவிடம் சொல்கிறான். நம்ம வீட்டுக் கதவை அங்க போட்டு வச்சிருக்காங்க போய் பார்க்கலாம் என்று. இருவரும் போய் அந்த கதவை பார்த்துவிட்டு அவ்வளவு மகிழ்ச்சியோடு திரும்பி வருகிறார்கள்.

இந்தக் கதவுக்கு பின்னால் இருக்கிற வறுமை, இந்த கதைக்கு பின்னால் இருக்கக்கூடிய உணர்வு, இந்த கதைக்கு பின்னால் இருக்கக்கூடிய நிராசைகள், இந்த கதைக்கு பின்னால் இருக்கக்கூடிய அந்த பிள்ளைகளின் கல்விக் கனவு கலைந்து போன வன்மம் இவை அத்தனையையும் கதவு என்னும் கதையில் கி.ரா. கொண்டு வந்திருக்கிறார்.

இப்படித்தான் பல குழந்தைகள் வாழ்வதற்கு வழி இல்லாமல்... அந்த குடும்பமே ஒருவேளை உணவுக்காக போராட வேண்டிய காலகட்டத்திலே நாம் வாழ்ந்திருக்கிறோம். ஒருவேளை உணவுக்காக ஒரு குடும்பமே அடிமையாக வேலை செய்யும். ஒருவேளை உணவுக்காக தங்கள் வாழ்க்கையையே எஜமானர்களுக்கு எழுதிக் கொடுத்துவிடக்கூடிய அவலத்தோடு இந்த மண்ணிலே பலர் வாழ்ந்திருக்கிறார்கள்.

**தமிழ்நாட்டிலே சாதித்த கல்வி!**

ஆனால் இன்று நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்த உணவு அரசியலில் இருந்து நாம் வெளியே வந்திருக்கிறோம். கல்வி என்பது எல்லோருக்கும் ஆனது என்பது தமிழ் நாட்டிலே சாதிக்கப்பட்டு இருக்கிறது. இன்னமும் இந்த சாதனையை நிகழ்த்தாத பல மாநிலங்கள் இந்தியாவிலே இருக்கின்றன. எல்லோருக்கும் கல்வி எல்லோருக்கும் உணவு என்றநிலையைநாம் உருவாக்கிஇருக்கிறோம்.

சில பேர் சொல்லலாம் எல்லாவற்றையும் இலவசமாக கொடுக்கிறார்கள் என்று. இது இலவசம் இல்லை. ஒருவேளை உணவுக்காக அடிமைகளாக இருந்த நிலையை மாற்றி எழுதியது. இதற்குப் பின்னால் இருக்கிற சமூக நீதியை புரிந்து கொள்ள வேண்டும். உணவிற்காக அடிமையாக இருந்தவர்களை விடுதலை செய்தோம் என்ற நிலைமை தமிழ்நாட்டில் சாத்தியப்பட்டிருக்கிறது என்ற பெருமை நமக்கு உண்டு.

**பள்ளிகள் இல்லாத இடங்களே கிடையாது!**

பல மாநிலங்களில் பல இடங்களில் இன்றும் பள்ளிக்கூடங்களே கிடையாது. ஆனால் தமிழ் நாட்டில் பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களை கிடையாது. பெருந்தலைவர் காமராஜரில் தொடங்கி இன்று வரை பள்ளிக்கூடங்கள் உயர்கல்விக்கான கல்லூரிகள் என்று ஒவ்வொரு அரசும் தொடர்ந்து பணி செய்து இருக்கிறது. இது சமூக நீதிக்கான போராட்ட வரலாற்றிலே மிக முக்கியமான பகுதி.

பள்ளிகள் இருந்தும் மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு பெரிய அளவில் வரவில்லை. அப்போது சென்னையிலே ஜஸ்டிஸ் பார்ட்டி அரசு பள்ளிகளில் மதிய உணவு என்பதை சிறிய அளவில் கொண்டு வருகிறார்கள். அதை அவர்களால் மேற்கொண்டு எடுத்து செல்ல முடியவில்லை. அதற்குப் பிறகு பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வந்து படிக்காமல் மாடு மேய்த்துக் கொண்டிருந்ததை பார்க்கிறார். ஏன் மாடு மேய்க்கிறீங்க பள்ளிக்கூடத்துக்கு போகலையா என்று கேட்டபோது, ‘நான் மாடு மேய்க்காம பள்ளிக்கூடத்துக்கு போனா நீ சாப்பாடு போடுவியா?’ என்று அந்த மாணவர்கள் கேட்டார்கள்.

**காமராஜர் உருவாக்கிய மதிய உணவுத்திட்டம்!**

சென்னை வந்த முதலமைச்சர் காமராஜர் பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை உருவாக்கி காட்டினார். அதற்குப் பிறகு தொடர்ந்து வந்த ஆட்சியினர் அது எந்த ஆட்சியாக இருந்தாலும் தி.மு.க.வாக இருக்கட்டும் அ.தி.மு.க.வாக இருக்கட்டும் யாரும் அந்தத் திட்டத்தை நிறுத்தவில்லை. அதை இன்னும் விரிவு படுத்திக் கொடுத்தார்கள்.

ஒன்றிய அரசாங்கம் 2035ல் 50 சதவீதம் மாணவர்களை உயர்கல்விக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற இலக்கு வைத்திருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் உயர்கல்விக்கு செல்லும் மாணவர்கள் விகிதம் சென்ற ஆண்டு 52 சதவீதத்தை தாண்டி விட்டோம். இதற்கு காரணம் அந்த பிள்ளைகள் படிக்க வேண்டும் என்பதற்காக நாம் தொடர்ந்து செய்திருக்கிற முயற்சிகள்.

**கல்லூரிகளை உருவாக்கிய தலைவர் கலைஞர்!**

பிள்ளைகளுக்கு திருமணம் செய்ய வேண்டும் என்பதற்காக படிப்பை நிறுத்திவிடக்கூடாது. அதனால்தான் திருமண உதவித் தொகை திட்டத்தை தலைவர் கலைஞர் கொண்டு வந்தார். எட்டாவது வரை படிக்க வையுங்கள் பத்தாவது வரை படிக்க வையுங்கள் உங்கள் மகளை நாங்கள் திருமணம் செய்து தருகிறோம் என்று ஒரு அரசு இருக்கிறது என்றால்... அந்த மாணவர்களின் கல்வி மீது அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்க வேண்டும்!

கல்லூரிகள் ரொம்ப தூரத்தில் இருந்தால் அனுப்ப மாட்டார்கள். குறிப்பாக பெண் பிள்ளைகளை அனுப்பவே மாட்டார்கள். அவர்கள் ஊருக்கு அருகிலேயே கல்லூரிகளை உருவாக்கினால் அவர்கள் நிச்சயமாக படிக்கும் வாய்ப்பு உண்டாகும் என்பதற்காக தான் தலைவர் கலைஞர் அவர்கள் சின்ன சின்ன ஊர்களில் கூட கல்லூரிகளை உருவாக்கினார். இன்று நாம் தேசிய அளவைவிட, அவர்கள் 27% தான் இருக்கிறார்கள். ஆனால் நாம் உயர் கல்வி விகிதத்தில் இவ்வளவு முன்னேறி இருக்கிறோம் என்றால்... எத்தனை பேர் இழுத்து வந்திருக்கிற தேர் தான் இது.

இத்தனை பேர் போராடி இத்தனை பேர் கஷ்டப்பட்டு கல்வியை அனைவருக்குமானது என்ற நிலையை நாம் தமிழ்நாட்டில் உருவாக்கி இருக்கிறோம். இது நம்மிடமிருந்து தட்டி பறிக்கப்படக் கூடாது என்றால் நீங்கள் இந்த போராட்ட வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் சமஸ்கிருதம் தெரிந்தால் தான் மெடிக்கல் காலேஜ் குள்ளேயே போக முடியும். சமஸ்கிருதம் தெரிந்தவர்கள் மட்டும் தான் அதாவது ஒரு ஜாதியை சேர்ந்தவர்கள் மட்டும்தான் மருத்துவர்கள் ஆக முடியும் என்ற நிலை இருந்தது. நீதிக்கட்சி ஆட்சியிலே தான் அந்த சட்டம் மாற்றப்பட்டது. அதற்குமுன் பெண்கள் மருத்துவக் கல்லூரியில் படிக்க முடியாத நிலை இருந்தது. ஆண்கள் போல பெண்கள் வேடமிட்டுச் சென்று படித்த அவலங்களும் உண்டு.

கல்விக்காக இந்த உலகம் இவ்வளவு போராடி இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் தெரிந்து கொண்டால் தான் நாம் பெற்றிருக்கக் கூடிய இந்த உரிமைகளை பாதுகாத்துவைத்துக்கொள்ளமுடியும். ஏனென்றால் இவ்வளவு கஷ்டப்பட்டு இதை நம் கையில் கொடுத்து விட்டு சென்றிருக்கிறார்கள்.

இன்று நாம் எல்லோரும் சர்வ சாதாரணமாக கல்லூரிகளுக்கு சென்று படிக்கிறோம் என்றால் அதற்குப் பின்னால் இருக்கும் போராட்டங்கள் என்ன... என்பதை எல்லாம் தெரிந்து கொண்டால் தான் இந்த காலகட்டத்தில் நான் பெற்றிருக்கும் உரிமைகளை பாதுகாக்க முடியும்.

நீங்கள் உங்கள் பெற்றோரிடம் போன் கேட்டிருப்பீர்கள். அவர்கள் வாங்கி தர தாமதிப்பார்கள். அவன் வச்சிருக்கான் இவன் வச்சிருக்கான் எனக்கு போன் வாங்கி தா என்று சொல்வீர்கள். பழைய போன் ஆக இருந்தால் கூட கொடு என்று சொல்வீர்கள். ஒரு கட்டத்தில் உங்களுக்கு போன் வாங்கி கொடுத்த பிறகு அப்போதுதான் உங்களுக்கு அதன் மதிப்பு தெரியும்.

இன்று நாம் கல்லூரியில் உட்கார்ந்து இருக்கிறோம், நாளை நினைத்தால் சிலிக்கான் வேலியில் போய் வேலை செய்ய முடியும் என்ற நிலையை இன்று நாம் அடைந்திருக்கிறோம் என்றால் அதற்கான வேல்யூ என்ன மதிப்பு என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் நமக்காக பல போர்க்களங்களை சந்தித்தவர்கள், ரத்தம் சிந்தியவர்கள், கண்ணீர் விட்டவர்கள் இவர்களுடைய வரலாறுகளை நாம் தெரிந்துகொள்ளவேண்டும் அதுதெரிந்தால் தான் இதை நம்மால் பாதுகாக்க முடியும்.

ஏனென்றால் நமக்கு இருப்பது மாபெரும் தமிழ் கனவு. அந்த கனவு எல்லோரும் சமம் எல்லோருக்கும் எல்லா வாய்ப்புகளும் இருக்க வேண்டும். ஆண் பெண், சாதி மதம் என்ற வித்தியாசம் இல்லாமல் ஒரு அழகான உலகத்தை நாம் உருவாக்க வேண்டும். எல்லோரும் என்றும் இங்கே தலை நிமிர்ந்து வாழக்கூடிய சுயமரியாதையோடு வாழக்கூடிய பெரியார் கனவு கண்ட ஒரு வாழ்க்கை வாழக்கூடிய உரிமை இருக்கிறது. அதுதான் நம்முடைய தமிழ் கனவு அதை உருவாக்கக் கூடியவர்கள் நீங்கள்தான்.

இந்நிகழ்ச்சியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கல்லூரி முதல்வர் சுப்புலெட்சுமி, நகர் மன்றத் தலைவர் கருணாநிதி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.



நாள் : 10.09.2023
ஞாயிறு காலை 9.00 மணி
இடம் : கலைஞர் திடல்,
நெய்வேலி ஆர்ச்கேட் அருகில்

## எங்களது
## இல்லத் திருமணத்திற்கு
## வருகை தரும்




மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்

# கழகத் தலைவர்

அவர்களையும்

கழக இளைஞரணி செயலாளர் – மாண்புமிகு

# உதயநிதி ஸ்டாலின்

அவர்களையும்

கடலூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர்
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்

## சி.வெ.கணேசன் அவர்களையும்

அமைச்சர் பெருமக்கள், தோழமை கட்சி தலைவர்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை கழக செயலாளர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் சார்பு, அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புக்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்று மகிழும்



**சபா. இராசேந்திரன்** B.SC., B.E.,
நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர்

**இரா.அங்கையற்கண்ணி** M.SC., B.Ed.,

**அரிமா க.சாரங்கபாணி**
கடலூர் மேற்கு ஒன்றிய அவைத் தலைவர்

**சா.செல்வராணி**

## நெய்வேலி சட்டமன்ற தொகுதி - கடலூர் மேற்கு மாவட்டம்


நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர்
சபா. இராசேந்திரன் B.SC., B.E.,
இல்லத் திருமண விழா
நாள் : 10.09.2023 ஞாயிறு காலை 9.00 மணி
இடம் : கலைஞர் திடல், நெய்வேலி ஆர்ச்கேட் அருகில்
திருமண விழாவினை தலைமையேற்று
நடத்தி வைக்க வருகை தரும்
கழகத் தலைவர் – மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களையும்
கழக இளைஞரணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம)
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்
சி.வெ.கணேசன்
தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கடலூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர்
ARASU ARTS

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

# (நான்காவது பட்டியல்)

### தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன், எம்.பி., அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சேலம் மத்திய மாவட்டம்**

அமைப்பாளர் - **அ.அன்புக்கரசு** 254/1, நரசிம்மன் சாலை, செவ்வாய்ப்பேட்டை, சேலம் - 636002.

துணை அமைப்பாளர்கள் - மா.சுரேஷ் 92, ஏனாதி பழைய காலனி, பெரியப்பட்டி, செம்மாண்டப்பட்டி, காடையாம்பட்டி, சேலம் -636309.செள.ஜெயப்பிரகாஷ் 1-145, சக்தி நகர், தட்டான் சாவடிப்பள்ளம், கொல்லப்பட்டி கிராமம், ஓமலூர் வட்டம், சேலம்.ச.பிரதீப் 1, கடம்பூர் முனியப்பன் கோவில் தெரு, 2வது க்ராஸ், நாகாத்தாம்மால் கோவில் தெரு, சேலம் 636015.ச.அருண் விவசாய அலுவலகம், டாடா மெயின் ரோடு, கருப்பூர், சேலம் - 12.ரா. ராஜேஷ் 204/1, தில்லை நகர், மாமங்கம், சேலம் -636302.ஏ.ரவிக்குமார் 1/40 புதூர் உ.மாரமங்கலம் அஞ்சல், ஓமலூர் தாலுகா, சேலம்.எம்.வி.பி.பிரபாகரன் 123/41 முல்லை நகர், 3வது கிராஸ், சூரமங்கலம், சேலம் - 636005 எஸ்.ராஜ்குமார் 26/52/3 சக்தி நகர், சேலம்-636007.சி.நடராஜ் 4/204, செங்கரடு, தாத்தையங்கார்பட்டி, அஞ்சல், ஓமலூர் தாலுகா, சேலம் - 636012.க.சத்தியன் 5/222ஏ, அ ண்ணாநகர், உத்திப்பன்காடு, மணியனூர், சேலம் - 10.

**சேலம் மேற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **எஸ்.ஏ.செந்தில் குமார்** 13/ 1-3, பச்சை மணியக்காரர் தெரு, புதுசாம்பள்ளி, ராமன் நகர் அஞ்சல், மேட்டூர் வட்டம், சேலம் - 636403.

துணை அமைப்பாளர்கள் - அ.அம்மாசி, 9/5 - 103, பஸ்நிலையம் அருகில், ஜலகண்டாபுரம் அஞ்சல், மேட்டூர் வட்டம், சேலம் - 636501.ம.பிரபு, 1/117, திப்பரத்தாம்பட்டி, மல்லிகுந்தம் அஞ்சல், மேட்டூர் வட்டம், சேலம் - 636458.ரா.திலீபன் கூனாண்டியூர் அஞ்சல், மேச்சேரி, மேட்டூர் வட்டம், சேலம் - 636458.பி.எம். தினேஷ்ராஜா பூமணியூர், கோனேரிபட்டி அஞ்சல், எடப்பாடி வட்டம், சேலம்.ரா.பச்சமுத்து 73/9 -1, புதுக்காடு, அழகனூர், மகுடஞ்சாவடி, சங்ககிரி வட்டம், சேலம்..ரா.செல்வம் வின்னர் விகாஸ் சர்தேசப்பள்ளி, கோரணம்பட்டி அஞ்சல், கொங்கணாபுரம், எடப்பாடி வட்டம், சேலம் 637102.ச.அம்சவள்ளி 3/42 - 1, கல்லங்காட்டூர், அ.புதூர் கிராமம், சுண்டமேட்டூர் அஞ்சல், சங்ககிரி வட்டம், சேலம் - 637 102.

**கோவை வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **தொ.மு.தியாகராஜன்** 54, திருவள்ளுவர் வீதி, தொண்டாமுத்தூர் கோவை.

துணை அமைப்பாளர்கள் - கி.வினோத் குமார் 5/116ஈ, சேரன் நகர், மேட்டுபாளையம், கோவை - 641301.பா.சதீஷ்குமார் 179, வடவள்ளி ரோடு, இடையர்பாளையம், கோவை - 25.சரவணன் கணபதி 5/85, தோலம்பாளையம், சீலியூர் வழி, மேட்டுப்பாளையம், கோவை.கா.தனக்குமார் 447 - பாரதி நகர், கணுவாய், கோவை - 641108.ச.பாபு 51ஏ, காமராஜர் வீதி, ஜனதா நகர், சரவணம்பட்டி அஞ்சல், கோவை..சி.பாலசுப்பிரமணி 4/81, காளையனூர் வீரபாண்டி, தடாகம் அஞ்சல், கோவை.மு.கோபிநாத் 185/4, மேற்கு ராமலிங்கம் சாலை, ஆர்.எஸ் .புரம், கோவை.க.முபாரக் பி.எஸ். என்.எல் ரோடு, ராஜேஷ்வரி நகர், கோவை.வா.ஆறுமுகபாண்டி, 8/6, பழனியப்பா நகர், பி.கே.புதூர், குனியமுத்தூர், கோவை - 8.பா.பார்த்திபன், மாரியம்மன் கோவில் வீதி, வடிவேலாம்பாளையம், பூலவபட்டி அஞ்சல், கோவை.

**கோவை தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **ந.ஜெகதீஸ்வரன்** 11/2, அங்கணன் கவுண்டர் வீதி, மேட்டூர், போத்தனூர், கோவை - 641 023.

துணை அமைப்பாளர்கள் - ப.மனோகரன் 4/36, பாப்பம்பட்டி அஞ்சல், கோவை 641016 க.சரவணபிரியன் 97-டி, காந்தி கடை வீதி, வாகராயம்பாளையம், கருமத்தம்பட்டி.ச.அபுதாகீர் 70, சேர்மேன் வீதி, பொள்ளாச்சி, கோவை - 642001.பி.வி.சரவணன் பள்ளபாளையம் அஞ்சல் சூலூர் - 641402.சு.சதீஷ்குமார் 2/57, கோபாலபுரம் தோட்டத்து சாலை, பொன்னாபுரம் அஞ்சல்..பெ. சுரேஷ் குமார் 4/119ஏ, உப்பிளியந் தோட்டம், ஒண்டிப்புதூர் (வழி) பீடம்பள்ளி அஞ்சல், சூலூர் - 641016.அ.ரமேஷ் குமார் 3/165ஏ, ராக்கியண்ணன் கோவில் வீதி, குரும்பபாளையம் - 641105.

**புதுச்சேரி - காரைக்கால் மாநிலம்**

அமைப்பாளர் - **கோ.செல்வராஜ்,** எண்.6, அரசு மேல்நிலை பள்ளி தெரு, திரு- பட்டினம், - காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - ம.ராமதாஸ் எண்.212, காந்திரோடு, போலகம் - திருபட்டினம், காரைக்கால் தி.விக்னேஷ் எண்.85, காமராஜர் சாலை, காரைக்கால் மு.ஹாஜாராஜிக் எண்.29, வேட்டைகாரன் தெரு, கோவில்பத்து - காரைக்கால் நெ.ஸ்டாலின் அஜய் எண்.561, பாரதியார் ரோடு, நேருநகர், காரைக்கால் வி.ஆர். எஸ்.குமார், எண்.24, இரண்டாவது குறுக்குதெரு, தில்லை நகர், தருமபுரம், காரைக்கால்.க.சந்துரு எண்.15, கொத்தளம் பேட்மேடு, காரைக்கால் இ.ஹரிஹரன் எண்.10, கோவில்பத்து தெரு, நிரவி, காரைக்கால் சி.அந்தோணிராஜ் எண்.5, சியோன் நகர்சந்து, குயவன்சாவடி, கீழஓடுதுறை, காரைக்கால்.

**புதுச்சேரி மாநிலம்**

அமைப்பாளர் - **ந.ரவிச்சந்திரன்,** 16, புதுநகர், டி.என். பாளையம், புதுச்சேரி - 605007

துணை அமைப்பாளர்கள் - யோ.எமிலன் 51, 2வது குறுக்குத் தெரு, கம்பன் நகர், ரெட்டியார்பாளையம், புதுச்சேரி - 605010 ஏ.தவமணி 10, பால்வாடித் தெரு, பாகூர்பேட், புதுச்சேரி - 607402. பெ.விஜி (எ) வெங்கடேசன் 23, பெருமாள் கோவில் தெரு, கூடப்பாக்கம், புதுச்சேரி - 605502.ந.குணராஜ் 11, ஐய்யனார் கோவில் தெரு, அரங்கனூர், புதுச்சேரி - 607402 ரா.ஆனந்தன் (எ) ஐயனார் வன்னியர் வீதி, வைத்திக்குப்பம், புதுச்சேரி - 12.இ.சீனுவாசன் 28, முதல் தெரு, பவழ நகர், புதுச்சேரி - 605005. சே.யோகேஷ் 2, சிதம்பரனார் வீதி, செங்கேணியம்மன் நகர், உருளையன்பேட்டை, புதுச்சேரி - 605005.கோ.ஜெயபாலன் 55, 56, ஸ்ரீதரன் நகர், மெயின் ரோடு அரியாங்குப்பம், புதுச்சேரி.செ. அய்யப்பன் 111, ஜான்குமார் நகர், புதுச்சேரி - 10.ஜா.அகஸ்டீன் சித்து (எ) சித்தானந்தன் 91, புவங்கரே வீதி, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605005 ச.சிவசக்தி முருகன் 32, வன்னியர் தெரு, திம்மநாயக்கன்பாளையம், புதுச்சேரி.

**கடலூர் மேற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - மு.சபஸ்டின் எண்.1, தமிழ்குச்சிப்பாளையம், மேம்பாட்டுத் தெரு, நெல்லிக்குப்பம் (அ), பண்ருட்டி தாலுகா,

**திருச்சி வடக்கு மாவட்டம்**

திருச்சி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆர்.விஜயராகவன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **த.சரவணன்,** (எண்.5/142, ஜி கலைஞர் நகர், சி.ஆர்.பாளையம், சிறுகனூர் அஞ்சல், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி) அவர்களையும், மேலும் கூடுதலாக **கே.பி.எஸ்.தினா,** (எண்.1/35, சிறுநாவலூர் அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சி) ஆகியோர் **திருச்சி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.** ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்**

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட கோல்டு டி.பிரகாஷ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **ஆர்.டி.சாரதி பெரியநாயகம்,** (எண்.3/79, வ.உ.சி தெரு, தெள்ளியார் அகரம், அய்யப்பன்தாங்கல், சென்னை - 600116.) அவர்கள் **காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.** ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

விழுப்புரம் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட கோல்டு ஏ.சி. கே.பிரேம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **ஆர்.பி.பாரத்,** (எண்.27/1295 முருகன் கோயில் தெரு, வழுதரெட்டி, விழுப்புரம்), அவர்கள் **விழுப்புரம் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.** ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஈரோடு மாநகரம்**

அமைப்பாளர் - **எஸ்.மகேந்திரன்** 11, கங்கை வீதி, வீரப்பன்சத்திரம், ஈரோடு - 638004.

துணை அமைப்பாளர்கள் - கு.அருண் பிரசாத் 79, கொனவாய்க்கால், வாசவி கல்லூரி அஞ்சல், ஈரோடு - 638316.ச.கோபிநாத் 10, கட்டபொம்மன் வீதி, வீரப்பன்சத்திரம், ஈரோடு - 638004.பா.பிரபுதேவா 1, வீர வீதி, கே.என்.கே.ரோடு, கருங்கல்பாளையம், ஈரோடு.- 3 ராயல் கணேஷ் 75, அரசிளங்கோ வீதி, சின்ன மாரியம்மன் கோவில், ஈரோடு - 3..ச.கோபாலகிருஷ்ணன் 65, கொங்கு நகர், பெரியவலசு, வீரப்பன் சத்திரம், ஈரோடு - 638004.எஸ்.ஏ.நாவலன் எல்.140, பெரியார் நகர், ஈரோடு.ரா.சி.தனசேகரன் 77, சக்தி நகர், 3வது வீதி, திண்டல், ஈரோடு - 12,

**தூத்துக்குடி மாநகரம்**

அமைப்பாளர்-**ம.ஆரோக்கிய ராபின் அசோகன்** டைப் - II, 3/4, முகாம் - I தெர்மல் நகர், தூத்துக்குடி - 6.

துணை அமைப்பாளர்கள் - சு.செல்வக்குமார் 49, கிருஷ்ண ராஜபுரம், 6ம் தெரு, தூத்துக்குடி - 2.மா.ராஜா, 2எஃப்/660, பி அண்டு டி காலனி, 13வது தெரு, தூத்துக்குடி.ந.அன்பழகன் 80/1, டுவீபுரம், 10 ம் தெரு, தூத்துக்குடி.ஜே.பிரதீப் 46சி, போல்டன்புரம் 1வது தெரு, தூத்துக்குடி.எல்.சில்வெஸ்டர் சாமுவேல், 92, சுப்பையாபுரம், 3வது தெரு, தூத்துக்குடி.

**திண்டுக்கல் மாநகரம்**

அமைப்பாளர் - **ஆர்.காளீஸ்வரன்** ஆர்.எம்.காலனி, 11வது கிராஸ், திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - வே.ஹரிஹரன் 16/ஏ, மார்கெட் குமரன் தெரு, சோலைஹால் பின்புறம், திண்டுக்கல்.சி.ராஜ்குமார் 29, மல்லிகை நகர், கோபால் நகர் விஸ்தரிப்பு, திண்டுக்கல்.பி. ஹென்றி 57-34, 1வது தெரு, மேட்டுப்பட்டி, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல்.ஜோ.ஜீட்கிளிங்டன், 81/6, ஜான்பிரிட்டோ லைன், மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.கு.ஹேம்நாத், 9/15, செல்லாண்டியம்மன் கோவில் தெரு, நாராயணபிள்ளை தோட்டம், திண்டுக்கல்.

**சேலம் மாநகரம்**

அமைப்பாளர் - **தா.ஆனந்தகண்ணன்** 47/3, கு.சீ.வெ.நகர், ஐந்து ரோடு, சேலம்.

துணை அமைப்பாளர்கள் - கோ.கண்ணன் 14/7, சோளம்பள்ளம் லைன், பழைய சூரமங்கலம், சேலம்.பி.எம்.நாகராஜ் 2/392, பெருமாள் கோயில் மேடு, 9வது தெரு, சீலநாயக்கன்பட்டி, சேலம். ரா.சுந்தரமூர்த்தி 230, தேசியபுனரமைப்புகாலனி, கிச்சிப்பாளையம், சேலம்.ச.மோகன் குமார் 106/1, ஸ்ரீ நகர், சின்ன திருப்பதி, சேலம் - 08.முனைவர்.வெ.செங்கமலை, 407/எ3, மாருதி நகர், கொண்டப்பநாயக்கன்பட்டி, சேலம் - 636008

**திருப்பூர் தெற்கு மாநகரம்**

அமைப்பாளர் - **ரா.தேவராஜ்** 30/67 பி.கே.ஆர் காலனி, தாராபுரம் ரோடு, திருப்பூர் - 641604.

துணை அமைப்பாளர்கள் - வெ.குணா, 22/17, வி.பி.சித்தன் நகர், வளையங்காடு, சாமுண்டிபுரம், குமார் நகர், திருப்பூர்.ஆ.மன்சூர் 88, சுகுமார் நகர், காங்கேயம் கிராஸ் ரோடு, திருப்பூர் - 641604.பொ.கனகசுந்தரம் 63, தென்னம்பாளையம் காலனி, திருப்பூர் - 641608.மு.சக்கீத் 10/15, கரட்டாங்காடு, 1வது வீதி, எஸ் கே என் லே அவுட், திருப்பூர்.கோ.முரளி 13/10, புதுக்காடு 2வது வீதி, வேலன் ஹோட்டல் எதிரில், திருப்பூர் - 641604.

**திருப்பூர் வடக்கு மாநகரம்**

அமைப்பாளர் - **பொ.பாலன்** 7, பொம்மநாயக்கன்பாளையம், பூலுவபட்டி, திருப்பூர் - 641602,

துணை அமைப்பாளர்கள் - ரா.பிரபு ராஜா எஸ்.வி.காலனி, 6வது வீதி, பி.என்.ரோடு, திருப்பூர் - 641602.சி.ஆர்.குமார் 8/3953, காமராஜ் நகர் அண்ணா நகர் கிழக்கு பி.என்.ரோடு திருப்பூர்.மா.பிரபு 153, அம்மையப்பா நகர், 15 வேலம்பாளையம், திருப்பூர் - 641652. சு.அருண் 4 உடையார் கவுண்டர் வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர்.ஏ.கே.ராமு 7/258, அங்கேரிபாளையம், செட்டிபாளையம், திருப்பூர் - 641603.

**கோவை மாநகர் மாவட்டம்**

அமைப்பாளர் - **எம்.எம்.சஞ்சய் குமார்,** 4, அண்ணா நகர் முதல் மெயின் ரோடு, பீளமேடு, கோவை - 04..

துணை அமைப்பாளர்கள் - செ.பாலமுரளி கிருஷ்ணன் 14ஏ/25-1, கே.காமராஜர் நகர், வி.ஜி.ராவ் நகர் அருகில், கணபதி, கோவை - 06.ஜெ.ராகுல் ராம் 821, மேட்டுப்பாளையம் சாலை, முகேஷ் பைப் அருகில், ஆர்.எஸ்.புரம், கோவை.வி.ஜெகநாதன் 4, ஸ்ரீ குஜன் பில்டர்ஸ், காந்தி லே அவுட், வடவள்ளி, கோவை..வி.உதயகுமார், 14, ராமலிங்க ஜோதி நகர், 3வது வீதி, இராமநாதபுரம், கோவை - 45, க.வெங்கடேஸ்வரன், 125,பாரதி நகர்,சிவில்விமானநிலையம், கோவை- 14.கே.என்.ராஜேஷ் 102, கோவிந்தசாமி லேஅவுட், செட்டி வீதி, கோவை-1 ஆர்.அசோக்குமார் 22, சின்னசாமி நாயுடு லே அவுட், லட்சுமிபுரம், கோவை.மு.சு.சித்திக் 66, துர்க்கலால் வீதி, கோட்டை, கோவை - 1.

**கரூர் மாவட்டம்**

அமைப்பாளர் - **ம.விக்ரம்** 2/648, சிந்து நகர், கோவை ரோடு, ஆண்டாங்கோவில் கிழக்கு அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் - 639002.

துணை அமைப்பாளர்கள் - சு.பிரபாகரன் 10/37, பெரிய வடுகப்பட்டி, மண்மங்கலம் அஞ்சல் மற்றும் தாலுகா, கரூர் - 639006.ப.சிவக்குமார் (எ) ப.குமார் அண்ணாநகர் முதல் நகர், ராயனூர், தோரணக்கல்பட்டி அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் - 639005.மா.நவீன் 7, கடைவீதி தெரு, புஞ்சை தோட்டக்குறிச்சி அஞ்சல், புகழூர் தாலுகா, கரூர் - 639113.ந.வடிவேல் பி. உடையாபட்டி, பண்ணப்பட்டி கிராமம், அரவக்குறிச்சி தாலுகா, கரூர் - 639119.பெ.ஆனந்தகுமார், 19, கீழ முதலியார் தெரு, குளித்தலை அஞ்சல் & தாலுகா, கரூர் - 639104

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 08-09-2023

**தயாநிதி மாறன் எம்.பி.**
செயலாளர்,
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

---

## ஜி 20 விருந்துக்கு கார்கேவுக்கு அழைப்பு இல்லை

# எதிர்க்கட்சி தலைவர்களை பா.ஜ அரசு மதிப்பதில்லை!

### ராகுல்காந்தி குற்றச்சாட்டு



லண்டன், செப்.10-

இந்தியாவில் ஜனநாயக அமைப்புகள் மீது முழு அளவில் தாக்குதல் நடப்பதாக குறிப்பிட்ட ராகுல்காந்தி, ஜி 20 விருந்துக்கு கார்கேவை அழைக்காதது எதிர்க்கட்சி தலைவர்களை பா.ஜ அரசு மதிப்பதில்லை என்பதை காட்டுவதாக குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி 5 நாட்கள் பயணமாக ஐரோப்பாவுக்கு சென்றுள்ளார். அவரது இந்த வெளிநாட்டுப் பயணம் இந்திய அயலக காங்கிரஸ் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. ராகுல் காந்தி நேற்று முன்தினம் பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரசல்ஸ் நகருக்கு சென்றடைந்துள்ளார். அங்கு ஐரோப்பிய ஆணைய எம்.பி.க்களை சந்தித்து பேசினார். அதன்பின் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு ராகுல்காந்தி பதில் அளித்து கூறியதாவது:

இந்தியாவில் ஜனநாயக அமைப்புகள் மீது முழு அளவிலான தாக்குதல் நடைபெற்று வருகிறது. நாட்டின் ஜனநாயக கட்டமைப்புகளை நசுக்கும் இந்த முயற்சி குறித்து ஐரோப்பிய யூனியன் நாடுகள் கவலையில் உள்ளன. ஜி 20 உச்சி மாநாட்டை இந்தியா தலைமை ஏற்று நடத்துவது மிகவும் நல்ல விஷயம். இந்தியா ஒரு பெரிய நாடு. ஒரு பெரிய நாடாக இருப்பதால், அது பல நாடுகளுடன் உறவுகளைக் கொண்டிருக்கும். எனவே இது ஒரு சாதாரண விஷயம். எவருடன் வேண்டுமானாலும் உறவு வைத்துக் கொள்ள இந்தியாவுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் ஜி20 இரவு விருந்துக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவிற்கு அழைப்புஇல்லை. மேலும் பல்வேறு எதிர்க்கட்சி தலைவர்களுக்கும் அழைப்பு இல்லை. அவர்கள் இந்தியாவின் 60 சதவீத மக்கள்தொகையின் தலைவர்கள்.

அவர்களை அழைக்காதது ஒன்றிய அரசு அவர்களை மதிப்பதில்லை என்பதைத் தான் காட்டுகிறது. அரசின் செயல் அதன் சிந்தனையைப் பற்றி கூறுகிறது. அதன் மூலம் இந்தியாவின் 60 சதவீத மக்களின் தலைவர்களை அவர்கள் மதிப்பதில்லை என்பதைத் தான் இந்த அரசு உங்களுக்கு சொல்கிறது. அதனால் தான் எதிர்க்கட்சித் தலைவரை (மல்லிகார்ஜுன் கார்கே) அழைக்க வேண்டாம் என்று அவர்கள் முடிவெடுத்துள்ளனர். அதன் பின்னால் என்ன வகையான சிந்தனை இருக்கிறது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். இந்தியாவில் பாகுபாடு மற்றும் வன்முறை அதிகரித்து வருகிறது. நம் நாட்டின் ஜனநாயக அமைப்புகள் மீது முழு அளவிலான தாக்குதல் உள்ளது. இது அனைவருக்கும் தெரியும். நான் அரசை விமர்சனம் செய்வதால் அவர்கள் மிகவும் கவலையடைந்தனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

**சிறுபான்மையினர் மீது தாக்குதல்**

ராகுல்காந்தி கூறும்போது,' இந்தியாவில் சிறுபான்மையினர் தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல பல சமூகங்களும் தாக்கப்படுகின்றன. தலித் சமூகங்கள், பழங்குடி சமூகங்கள், தாழ்த்தப்பட்ட சமூகங்கள் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. நாட்டின் தன்மையை மாற்ற முயற்சி நடக்கிறது. மணிப்பூரில் நடந்த கலவரமும் அப்படிப்பட்ட ஒன்றுதான். காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. அதில் யாரும் தலையிட முடியாது. ரஷ்யா உக்ரைன் மோதலில் இந்தியாவின் தற்போதைய நிலைப்பாட்டை அனைத்து எதிர்க்கட்சிகளும் எந்தவித பேதமும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளும். நாங்கள் ரஷ்யாவுடன் உறவு வைத்திருக்கிறோம்' என்று அவர் கூறினார்.

**இந்திய ஒற்றுமை யாத்திரை**

ராகுல் கூறும்போது,' இந்தியா முழுவதும் சுமார் 4,000 கிமீ நீளமுள்ள இந்திய ஒற்றுமை யாத்திரையை நான் மேற்கொண்டேன். இந்த யாத்திரை தான் மக்களுடன் என்னை நெருக்கமாகக் கொண்டு வந்தது. அவர்களின் குரல் அரசிடம் எடுபட வேண்டும். அங்குதான் பா.ஜ.வுக்கும் எங்களுக்கும் அடிப்படை வேறுபாடு உள்ளது. நாங்கள் மக்களின் குரலுக்கு மதிப்பளிக்கிறோம். ஏழைகளின் குரலுக்கு மதிப்பளிக்கிறோம், அனைவரின் குரலையும் மதிக்கிறோம், நாங்கள் முடிவுகளை எடுப்பதற்கு முன் அனைவருடன் உரையாட விரும்புகிறோம்' என்றார்.

---

## கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

# ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களுக்கான விண்ணப்பங்கள்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர், செப். 10-

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பின்படி, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விருப்ப முள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இதில் ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படு வர். துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர் / பழங்குடியினத்தைச் சேர்ந்தவராகவும் மற்றும் பெண் துணை அமைப்பாளர் ஒருவரும் இருப்பது அவசியம். ஒரு துணை அமைப்பாளர் தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவராக இருத்தல் அவசியம். நியமிக்கப்படவுள்ள நிர்வாகிகள் அனைவரும் கல்லூரி / டிப்ளமோ படிப்பை முடித்த வராகவோ அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடியவராகவோ இருத்தல் வேண்டும்.

இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் கடலூர் கிழக்கு மாவட்ட அலுவலகத்திலோ அல்லது முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தோ அல்லது வலைதள முகவரியிலிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன், மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும். அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் அந்தந்த மாவட்டத்திலேயே மாணவர் அணி நிர்வாகிக ளால் நடத்தப்படும். நேர்காணல் நடைபெறும் நாள், நேரம், இடம் பின்னர் தெரிவிக்கப்படும்.

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கல்விச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, நகல் இணைக்கப்பட வேண்டும். பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால் அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம். விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்ப வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## அமைச்சர் இ-பெரியசாமிக்கு கலைஞர் விருது வழங்கிய

# முதல்வருக்கு அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நன்றி!

### திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தீர்மானம் நிறைவேற்றம்

ஒட்டன்சத்திரம், செப். 10-

கழக துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான பெரியசாமி அவர்களுக்கு கலைஞர் விருதை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான அர. சக்கரபாணி தலைமையில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமை வகித்தார்.

கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கலைஞர் விருதினை அறிவித்த முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து ஒருமனதாக தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. தேர்தல்காலத்தில் அறிவித்த வாக்குறுதிகளை தமிழக அரசு குறுகிய காலத்தில் நிறைவேற்றியதற்கும், காலை சிற்றுண்டி திட்டத்தை அறிவித்ததற்கும், கலைஞர் மகளிர் உரிமை தொகை உள்பட மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை கொண்டு வந்ததற்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் அனைத்து மக்களுக்கு சீரான குடிநீர் கிடைக்க வரலாற்று சிறப்புமிக்க கூட்டுக்குடிநீர் திட்டம் வழங்கியதற்கு நன்றி தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது. தொடர்ந்து கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நலத்திட்ட உதவிகள், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், கவிய ரங்கம், தெருமுனை கூட்டம், திண்ணை பிரச்சாரம் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதை போட்டி நடத்துவது, வேலூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் மாவட்டத்திலிருந்து அதிகளவில் கலந்து கொள்வது, சேலத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாட்டிற்கு திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து அதிக அளவில் இளைஞர்கள் சீருடைகளுடன் கலந்து கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் மாவட்ட அவை தலைவர் மோகன், மாவட்ட துணை செயலாளர் ராஜாமணி, பொருளாளர் விஜயன், முன்னாள் எம்எல்ஏ ஆண்டி அம்பலம், நகர செயலாளர் வெள்ளைச்சாமி ஒன்றிய செயலாளர்கள் தர்மராஜ், சுப்பிரமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### போளூர் கே. கோவிந்தசாமி
### செப்டம்பர் 10 (2011)



திருவண்ணாமலை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 1970 முதல் 1980 வரை பத்தாண்டுகள் போளூர் பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 2011 வரையிலான 34 ஆண்டுகள் பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ‘முதலமைச்சர் கோப்பை’ போட்டி பற்றிதான் இந்தியா முழுவதும் பேசப்படுகிறது!

# உலகத்தரம் வாய்ந்த வீரர் - வீராங்கனைகளை உருவாக்குவது நமது கடமை!

## இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**சென்னை, செப்.10-**

**‘முதலமைச்சர் கோப்பை’ போட்டி பற்றிதான் இந்தியா முழுவதும் இன்றைக்கு பேசப்படுகிறது என்றும், உலகத்தரம் வாய்ந்த வீரர் - வீராங்கனைகளை உருவாக்குவது நமது கடமையாகும் என்றும் இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத்துறை ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில் குறிப்பிட்டார்.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (08.09.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை மற்றும் நேரு இளையோர் மையம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டப்பணிகள், மேம்பாட்டுத்திட்டங்கள், மற்றும் செயல்பாடுகள் குறித்து துறை அலுவலர்கள், மாவட்ட விளையாட்டு அலுவலர்கள்,தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு விடுதி மேலாளர்கள், விளையாட்டு பயிற்றுநர்கள், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் நேரு யுவ கேந்திரா ஆகிய துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வுக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். சுந்தர், தேசிய மாணவர் படைத் துணைத் தலைமை இயக்குநர் அதுல் குமார் ரஸ்தோகி, நேரு யுவ கேந்திரா மாநில இயக்குநர் குன்ஹமது, நாட்டு நலப்பணித் திட்ட மாநில அலுவலர் ம. செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை மற்றும் நேரு இளையோர் மையம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டப்பணிகள், மேம்பாட்டுத் திட்டங்கள், மற்றும் செயல்பாடுகள் குறித்து துறை அலுவலர்கள், மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு விடுதி மேலாளர்கள், விளையாட்டு பயிற்றுநர்கள், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் நேரு யுவ கேந்திரா ஆகிய துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

ஒரே இடத்தில் உங்களையெல்லாம் சந்திப்பதிலே மகிழ்ச்சி. உங்களில் பலரை அந்தந்த மாவட்டத்தில் உள்ள எஸ்டிஏடி (SDAT) ஹாஸ்டல்ஸ், கிரவுண்ட்ஸ் அங்கெல்லாம் நான் ஆய்வுசெய்ய வரும் போது ஏற்கனவே சந்தித்து இருக்கிறேன். மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி.

முதலில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மிகச் சிறப்பாக நடத்தி முடித்த, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். முதலமைச்சர் கோப்பை, வருடாவருடம் நடக்கின்ற போட்டிகள்தான். ஆனால், எந்த வருடமும் இல்லாத அளவுக்கு இந்த வருடம் இந்தியா முழுவதும் முதலமைச்சர் கோப்பையைப் பற்றி பேசி இருக்கிறார்கள். எனவே, உங்கள் அத்தனைபேருடைய ஒருங்கிணைப்பும், முயற்சியும்தான் இந்த முதலமைச்சர் கோப்பைக்கான மிகப்பெரிய வெற்றி.

### 3.70 லட்சம் வீரர்கள் பங்கேற்பு!

தமிழ்நாடு முழுவதும் இருந்து சுமார் 3 இலட்சத்து 70 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். இவ்வளவு வீரர், வீராங்கனைகளை, நம்மால் கையாளும் அளவிற்கு நம்மிடம் விளையாட்டு கட்டமைப்புகள் உள்ளன, என்பதை நினைக்கும் போது மிகவும் பெருமையாக உள்ளது.

அதேபோல் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல், மைதானங்கள் பெரும்பாலான மாவட்டங்களில் உள்ளது. அதேபோல் பயிற்சியாளர்கள் பல்வேறு விளையாட்டுக்காக 76 பேர்களை மாநிலம் முழுவதும் நியமித்துள்ளோம். அவர்கள் அனைவரையும் வெளிப்படையான முறையில், தேர்வு செய்யப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

### தொகுதிக்கொரு மினி ஸ்டேடியம்!

மேலும், தற்போது தொகுதிக்கு ஒரு மினி ஸ்டேடியம் கட்டுவதற்கான அந்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் முதல்கட்டமாக 10 தொகுதிகளில் அந்தப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

அதேபோல்எளியபின்னணியிலிருந்து வரும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளை ஊக்குவிக்க, அவர்களுடைய பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்ய முதன்முறையாக, `தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன்’தொடங்கப்பட்டது. இதற்கு பல்வேறு நிறுவனங்கள் இதுவரை 15 கோடி ரூபாய்க்கு மேல் நிதி உதவி அளித்துள்ளார்க்ள். அதிலிருந்து பல இலட்சம் ரூபாயை, பல விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகையாக, அவர்களின் பயண செலவுக்காகத் தொடர்ந்து வழங்கி வருகின்றோம். அப்படி உதவி பெறுபவர்களும் பல்வேறு சாதனைகளைச் செய்து வருகிறார்கள்.

பன்னாட்டுப் போட்டிகளையும் தெளிவான திட்டமிடலுடன் நடத்தக்கூடிய திறமை பெற்றவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில், `செஸ் ஒலிம்பியாட்’, `ஏசியா ஹாக்கி சாம்பியன்சிப் போட்டி’, `சர்வதேச ஸ்குவாஸ் வேர்ல்டு கப்’, `சர்வதேச அலைச் சறுக்குப் போட்டி’ எனப் பல்வேறு சர்வதேசப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி உள்ளோம்.

### சர்வதேச போட்டிகள்!

அதைத் தொடர்ந்து வரும் மாதங்களில் ஹெச்.சி.எல்லுடன் இணைந்து `சைக்கிளத்தான்’, `சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்’ உள்ளிட்ட பல்வேறு சர்வதேசப் போட்டிகளையும் நடத்த உள்ளோம். அதேபோல் `குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி’, `ஒலிம்பிக் ஸ்போர்ட்ஸ் அகாடமி’ களையும் தொடங்கவுள்ளோம்.

> *பன்னாட்டுப் போட்டிகளையும் தெளிவான திட்டமிடலுடன் நடத்தக்கூடிய திறமை பெற்றவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில், ‘செஸ் ஒலிம்பியாட்’, ‘ஏசியா ஹாக்கி சாம்பியன்சிப் போட்டி’, ‘சர்வதேச ஸ்குவாஸ் வேர்ல்டு கப்’, ‘சர்வதேச அலைச் சறுக்குப் போட்டி’ எனப் பல்வேறு சர்வதேசப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி உள்ளோம்.*

ஒடிசா மாநிலத்துடனும், ராமச்சந்திரா பல்கலைக்கழகத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளோம். அதேபோல், தேசிய, சர்வதேசப் போட்டியில் சாதிக்கும் வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையும் வழங்கிவருகின்றோம். அப்படி 2021ஆம் ஆண்டு முதல் இதுவரை ரூபாய் 65 கோடி ரூபாயை ஊக்கத்தொகையாக வழங்கியுள்ளோம்.

### கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி

அதேபோல், மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கும் உயரிய ஊக்கத்தொகை வழங்க வேண்டும் என்கின்ற அவர்களுடைய 20 வருட கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்கள் அதற்கான அரசாணையையும் வழங்கி உள்ளார்கள். கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டியை வருகின்ற ஜனவரி மாதம் நடத்த உள்ளோம். இதற்காக மாவட்டவாரியாக 36 மையங்கள் தொடங்கப்பட்டு உள்ளன.

இப்படி தமிழ்நாட்டை இந்திய ஒன்றியத்தின் விளையாட்டுத் தலைநகரமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசும், நம்முடைய இளைஞர் நலன் மேம்பாட்டுத்துறையும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு உழைத்து வருகின்றது. அதனால், கோடிக்கணக்கான ரூபாய் முதலீடுகள், உட்கட்டமைப்பு, மனித உழைப்புகள் இருந்தும் அது மாநில, தேசிய, சர்வதேச அளவிலான வீரர், வீராங்கனைகளை அதிக அளவில் உருவாக்கவில்லை, என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். அது வருத்தத்தைத் தருகின்றது.

திறமையான வீரர், வீராங்கனைகளை உருவாக்குவது என்பது உங்கள் கையில் தான் உள்ளது. நாங்கள் திட்டங்களைத் தீட்டி அதற்கான நிதிகளை ஒதுக்கிக் கட்டுமானங்களை மட்டுமே ஏற்படுத்தித் தர முடியும். ஆனால், அதனைப் பயன்படுத்திக் கொண்டு மிகச் சிறந்த வீரர், வீராங்கனைகளை உருவாக்குவதை நீங்கள்தான் உறுதி செய்ய வேண்டும்.

இன்றைய சூழலில் விளையாட்டை வாழ்க்கையாக எடுத்து கொண்டு ஒரு மாணவன், மாணவி வருவது என்பதே ஒரு மிகப்பெரிய சவால், மிகப்பெரிய விஷயம். ‘எதிர்காலத்தில் இதில் இதை சாதிக்க முடியுமா, நமக்கு வேலை கிடைக்குமா, மாநில தேசிய அணிகளில் இடம் கிடைக்குமா’... இது போன்ற பல கேள்விகள் அவர்கள் முன் நிற்கும். இதனால் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை விளையாட்டுக்கு அனுப்பவே மிகவும் யோசிக்கிறார்கள் என்பது உங்களுக்கேத் தெரியும்.

வசதியான பெற்றோர்கள் தனியார் பயிற்சியாளர்களை வைத்துப் பயிற்சி கொடுத்து விடுகிறார்கள். ஆனால், ஏழை, எளிய, நடுத்தர குடும்ப பெற்றோர்கள் விளையாட்டில் ஆர்வம் உள்ள தங்கள் பிள்ளைகளை நம்முடைய எஸ்.டி.ஏ.டி (SDAT) ஹாஸ்டலை நம்பி மட்டும்தான் அனுப்பி வைக்கின்றார்கள். அதை நீங்கள் உணர வேண்டும்.

அப்படி நம்மை நம்பி 2,500 குழந்தைகளை பெற்றோர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கையை நிறைவேற்றும் வகையில் மிகச்சிறந்த உலகத்தரம் வாய்ந்த வீரர், வீராங்கனைகளை உருவாக்குவது நம்முடைய துறையின் கடமை.

> *தமிழ்நாடு முழுவதும் இருந்து சுமார் 3 இலட்சத்து 70 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். இவ்வளவு வீரர், வீராங்கனைகளை, நம்மால் கையாளும் அளவிற்கு நம்மிடம் விளையாட்டு கட்டமைப்புகள் உள்ளன, என்பதை நினைக்கும் போது மிகவும் பெருமையாக உள்ளது.*

அதற்கு முதலில் வழங்கப்பட்ட பொறுப்பில், பணியில் நம்மை அப்டேட் செய்து கொள்ளவேண்டும். விளையாட்டை மேம்படுத்த மாநில, ஒன்றிய அரசினுடைய திட்டங்களை நீங்கள் முதலில் தெரிந்து வைத்திருக்க வேண்டும். சமீபத்தில் ஒரு மாவட்டத்திற்கு நான் ஆய்வுக்குச் சென்றிருந்தபோது அந்த மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அதிகாரிக்கு நாம் ‘தமிழ்நாடு சாம்பியன்ஷிப் பவுண்டேஷன்’ தொடங்கப்பட்டதும், அதன் நோக்கம் பற்றிக்கூட அவர் தெரிந்திருக்கவில்லை. நீங்கள் திட்டங்கள் குறித்து தெரிந்து வைத்திருந்தால் தான் அதன் பலன்களை விளையாட்டுவீரர், வீராங்கனைகளுக்குப் பெற்றுத் தர முடியும்.

நம்முடைய விடுதி மாணவ, மாணவிகள் மட்டுமின்றி, பள்ளிகளில் இருந்து திறமையானவர்களைக் கண்டறிவதற்கு என்ன மாதிரியான திட்டங்கள் வைத்துள்ளோம் என்பதைக் குறித்தும் நீங்கள் யோசிக்கவேண்டும். அதேபோல் ஒவ்வொரு வீரர், வீராங்கனைக்கும் ஒதுக்கப்படக்கூடிய தொகை முறையாக அவர்களுக்காக செலவிடப்பட வேண்டும். ஹாஸ்டல்காலியிடங்களைநிரப்புவதற்கு, நீங்கள் கடும் முயற்சி எடுக்க வேண்டும்.

தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்கு அந்த வீரர், வீராங்கனைகள் தேர்வு நேர்மையான முறையில் நடைபெறுவதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். ஏதாவது, முறைகேடு குறித்து தெரியவந்தால் அதுகுறித்து உடனடியாக உறுப்பினர் செயலர் அல்லது கூடுதல் தலைமைச் செயலர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்.

### வீரர் வீராங்கனைகளுக்கு பாதுகாப்பு

வீரர், வீராங்கனைகளுடைய பாதுகாப்பு என்பது மிகமிக அவசியம். அதில் எந்த விதமான சமரசமும் செய்து கொள்ளக் கூடாது. எனவே, அதில் அதிக கவனம் எடுத்து செயல்பட வேண்டும் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

2021ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நடைபெற்ற பல்வேறு தேசிய அளவிலான போட்டிகளில் வெறும் 135 பதக்கங்களை மட்டுமே நாம் வென்றுள்ளோம் என்பது மிக கவலை அளிக்கக்கூடிய ஒரு விஷயம். இனிமேல் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கும் மேற்பட்ட தேசிய அளவிலான பதக்கங்களை வெல்வோம் என்பதை இலக்காகக் கொண்டு செயல்படுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன். ஒவ்வொரு பயிற்சியாளரும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தேசிய பதக்கத்தை யாவது பெற்றுத் தர உறுதியேற்க வேண்டுமென்று இந்த நேரத்தில் உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மாவட்டங்களிலிருந்து வந்திருக்கும் நீங்கள் ஒரு சில கோரிக்கைகள் எல்லாம் நீங்கள் வைத்திருக்கிறீர்கள். இந்தக் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றித் தரப்படும். அதேபோல சில பணிகள் தொய்வில் இருக்கின்றன. பல வருடங்களாக முடிக்கவேண்டிய பணிகள் எல்லாம் தொய்வில் இருக்கின்றன. அதையெல்லாம் அந்தந்த துறைகளுடன் நீங்கள் ஒருங்கிணைத்துக் குறிப்பிட்ட அந்த தேதிகளில் முடித்துத் தரும்படி நான் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு உடற்கல்வி விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் காலியிடம் குறித்தும் இங்கு தெரிவித்திருக்கிறார்கள். தேசிய மாணவர் படை என்.சி.சி (N.C.C.) கோரிக்கைகளும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். நாட்டு நலப்பணித் திட்டம் (N.S.S.) நடத்திய `இளைஞர் திருவிழா’ குறித்தும் இங்கு பேசப்பட்டது.

### ஒவ்வொரு மாதமும் ஆய்வுக்கூட்டம்!

இதுபோன்ற ஆய்வுக் கூட்டம் மாதம் ஒருமுறை உறுப்பினர் செயலர் தலைமையிலும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையிலும், மூன்று மாதத்திற்கு ஒருமுறை, என்னுடைய தலைமையிலும் இனிமேல் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொண்டு, வந்திருக்கும் உங்கள் அத்தனை பேருடைய கருத்துக்கள் அத்தனையையும் நாங்கள் இங்கே குறித்து வைத்திருக்கின்றோம்.

எனவே, மீண்டும் அடுத்த ஆய்வுக்கூட்டத்திலே சந்தித்து இதைவிட, இன்னும் நிறைய விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கின்ற வகையில் நம்முடைய ஆய்வுக் கூட்டம் நடைபெறும். ஆய்வுக்கூட்டத்துக்கு வந்திருக்கும் அத்தனைப்பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர். சுந்தர், தேசிய மாணவர் படைத் துணைத் தலைமை இயக்குநர் அதுல் குமார் ரஸ்தோகி, நேரு யுவ கேந்திரா மாநில இயக்குநர் குன்ஹமது. நாட்டு நலப்பணித் திட்ட மாநில அலுவலர் ம. செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அதன் அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, இ. பரந்தாமன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.9.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை விபத்தில் சிக்கியவர்களை விபத்துக்குள்ளான வாகனங்களில் இருந்து மீட்டெடுக்கும் பணிக்கான "வீரா (VEERA – Vehicle for Extrication in Emergency Rescue and Accidents) அவசரகால மீட்பு மற்றும் விபத்துக்களிலிருந்து மீட்கும் வாகனத்தின் பயன்பாட்டினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்திப் ராய் ரத்தோட், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### இயக்குநர் – நடிகர்

# மாரிமுத்து மறைவு - தமிழ்த் திரையுலகுக்கு பேரிழப்பாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

'சென்னை, செப். 10-

இயக்குநர்-நடிகர் மாரிமுத்து அவர்களின் மறைவு தமிழ்த் திரையுலகுக்கு நிச்சயம் ஒரு பேரிழப்பாகும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இயக்குநரும், நடிகருமான மாரிமுத்து அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கண்ணும் கண்ணும், புலிவால் ஆகிய திரைப்படங்களின் இயக்குநரும், பிரபல நடிகருமான திரு. மாரிமுத்து அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

தேனி மாவட்டத்தில் இருந்து சினிமா



கனவுகளுடன் சென்னை வந்து, பல்லாண்டுகள் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து, இயக்குநர் ஆனவர் திரு. மாரிமுத்து அவர்கள். ஐம்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து, யதார்த்தமான நடிகராகவும் பாராட்டப்பட்டவர். மேலும், சின்னத்திரையிலும் தனது நடிப்புத் திறனால் தமிழ்நாட்டின் ஒவ்வொரு இல்லத்திலும் அறிமுகமானவராகப் புகழ்பெற்றார்.

மேலும், பல நேர்காணல்களிலும் நிகழ்ச்சிகளிலும் இவரது பேச்சுகள் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு சேர்க்கும் வகையில் அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது மறைவு தமிழ்த்திரையுலகுக்கு நிச்சயம் ஒரு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து துயரில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினருக்கும், திரைத்துறை நண்பர்களுக்கும், இரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

### மண்டல பொறுப்பாளர் ப.அப்துல் மாலிக் தலைமை!

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் நேர்காணல்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பார்வையிட்டார்!

கடலூர், செப். 10-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில், நேற்று காலை 8 மணியளவில் நடைபெற்றது.

கழக இளைஞரணி துணை செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான ப.அப்துல்மாலிக் தலைமை தாங்கினார். மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் எஸ்.ஜோயல், பிரகாஷ், இன்பாரகு, இளையராஜா, சீனுவாசன், ராஜா, பிரபு, ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், துணை அமைப்பாளர்கள் ஏ.எம். மதியழகன், ஜி.முத்து குமார், கே.மணிகண்டன், கே.ஜெகன், வி.ஜே.அன்பழகன், டி.பிரபு ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான, கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்துகொண்டு நேர்காணலை மேற்பார்வையிட்டார்.

கடலூர் கிழக்கு மாவட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகத்தை சேர்ந்த இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்காக விண்ணப்பித்தவர்களிடம் நேர்காணல் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா ,குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய செயலாளர் வி.சிவகுமார், வடக்கு ஒன்றிய செயலாளர் திருமாவளவன், கம்மாபுரம் மத்திய ஒன்றிய செயலாளர் சுந்தர பாண்டியன், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றிய செயலாளர் நாராயணசாமி, வடலூர் நகர செயலாளர் தமிழ்ச்செல்வன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், புகழேந்தி தொ.மு.ச. நிர்வாகிகள் திருமாவளவன், பாரி, ஐயப்பன் , ஜெரால்ட் குறிஞ்சிப்பாடி பேரூர் செயலாளர் கே.வி.பி.சங்கர், வடலூர் நகராட்சி தலைவர் சிவக்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அப்பு சத்திய நாராயணன்,மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஜாபர் அலி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சதீஷ் குமார், கடலூர் முதுநகர் பகுதி செயலாளர் இளையராஜா, கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் எம்.எஸ். கணேஷ்குமார், ராஜேஷ், துரைராஜ், அன்புகுமரன், சதாம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.





கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில், நேற்று காலை 8 மணியளவில் நடைபெற்றது. கழக இளைஞரணி துணை செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான ப.அப்துல்மாலிக் தலைமை தாங்கினார். மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் எஸ்.ஜோயல், பிரகாஷ், இன்பாரகு, இளையராஜா, சீனுவாசன், ராஜா, பிரபு, ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், துணை அமைப்பாளர்கள் ஏ.எம்.மதியழகன், ஜி.முத்துகுமார், கே.மணிகண்டன், கே.ஜெகன், வி.ஜே.அன்பழகன், டி.பிரபு ஆகியோர் வரவேற்புரையாற்றினர். வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான, கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கலந்துகொண்டு நேர்காணலை மேற்பார்வையிட்டார்.

### நீலகிரி மாவட்டம் உலிக்கல் பேரூராட்சியில்

# ரூ.4.06 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்!

உதகை, செப். 10-

நீலகிரி மாவட்டம், உலிக்கல் தேர்வு நிலை பேரூராட்சி பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ரூ.63 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட சாலை மேம்பாட்டு பணிகளை திறந்து வைத்து, நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.4.06 கோடி மதிப்பில் நடைபெறவுள்ள சாலை மேம்பாட்டு பணிக்காக தொடக்க பணிகளை துவக்கி வைத்தார்.

நீலகிரி மாவட்டம், உலிக்கல் தேர்வு நிலை பேரூராட்சி பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், நான்சச் சி.எஸ்.ஐ. உயர்நிலைப்பள்ளியில் 2019-2020 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ்; ரூ.50 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட ஆனைப்பள்ளம் சாலையினையும், 2022-2023 15வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.13 இலட்சம் மதிப்பில் நெடுஞ்சாலைத்துறை பிரதான சாலை முதல் வெள்ளாள மட்டம் வரை முடிக்கப்பட்ட சிமெண்ட் சாலையினையும் என மொத்தம் ரூ.63 இலட்சம் மதிப்பில்; முடிக்கப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (08.09.2023) திறந்து வைத்து, பள்ளியில் குழந்தைகளுக்கு வழங்கும் உணவினை உட்கொண்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், சுற்றுலாத்துறை அமைச்சர், 2022-2023 நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.23 கோடி மதிப்பில் முத்தநாடு ரோல் மட்டம் முதல் பவானி வரையிலும், தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு திட்டத்தின் கீழ் பனாட்டி பிரிவு முதல் இருட்டு சோலை, கொலக்கொம்பை முதல் முத்தநாடு வரையிலும், ரூ.1.83 கோடி மதிப்பில் ட்ரூக் முதல் நான்சச் தேயிலை தொழிற்சாலை வரை சாலை மேம்பாட்டு பணிகள் என மொத்தம் ரூ.4.06 கோடி மதிப்பில் நடைபெறவுள்ள பணிகளுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் செங்கல்புதூரில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.17.50 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் அங்கன்வாடி மைய கட்டட பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, சுற்றுலாத் துறை அமைச்சர், குன்னூர் ஊராட்சி ஒன்றியம் மேலூர் ஊராட்சிக்குட்பட்ட தை மலையில் 2022-2023 முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ்; ரூ.91.00 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் சாலை பணியினையும், ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.22.65 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் 151 வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் பணியினையும், ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் மூலம் ரூ.5 இலட்சம் மதிப்பில் மஞ்சக் கொம்பை பஜாரில் திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்யும் கூடாரத்தினையும், ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.2.70 இலட்சம் மதிப்பில் ஊர்திட்டு பகுதியில்; 16 வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் பணியினையும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பில் ஊர் திட்டு பகுதியில்; கட்டப்பட்டு வரும் பல்நோக்கு கட்டட பணியினையும் என மொத்தம் ரூ.1.46 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் மற்றும் முடிக்கப்பட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர், 2022-2023 15வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சம் மதிப்பில் மேல் ஒசாட்டி பல்நோக்கு கட்டடம் முதல் சுடுகாடு வரை முடிக்கப்பட்ட நடைபாதையினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர், உபதலை ஊராட்சியில் 2022-2023 முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெங்கால் எஸ்டேட் முதல் ஏழு ஏக்ரா சாலை வரை ரூ.42.25 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் சாலை பணியினையும், 2021-2022 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட பழத்தோட்டம் அங்கன்வாடி மையத்தினையும், 2022-2023 முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.76 கோடி மதிப்பில் குப்பைக்குழி முதல் சோகத்தொரை வரை நடைபெற்று வரும் சாலை பணியினையும், ரூ.3.40 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் உபதலை ஊராட்சி அலுவலக பழுது பார்ப்பு பணியினையும் என மொத்தம் ரூ.2.38 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் மற்றும் முடிக்கப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

# மக்கள் குறை தீர்க்கும் நிகழ்ச்சிகள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பி.கீதாஜீவன் பங்கேற்பு!

தூத்துக்குடி, செப். 10-

தி.மு.கழக துணைப் பொதுச்செயலாளரும்,தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களும் சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டதி.மு.கசெயலாளருமான பி.கீதா ஜீவன் ஆகியோர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி நிரல் விபரம்



**நாள் : 11.09.2023**

**திங்கள்கிழமை**

மாலை 4.30 மணி, ராஜாபுதுக்குடி மற்றும் சன்னதுபுதுக்குடி-கயத்தாறு மத்திய ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறை கேட்டல்.

மாலை 5.30 மணி - சவலாப்பேரி கயத்தாறு மத்திய ஒன்றியம் - மக்கள் களம்-நிகழ்ச்சிமூலம்பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 5.45 மணி - ஆசூர் -கயத்தாறுமத்தியஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 6.15 மணி - கே.சிவஞானபுரம் - கயத்தாறு மத்திய ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்,

மாலை 7.00 மணி - காப்புலிங்கம் பட்டி - கயத்தாறு மத்திய ஒன்றியம் - ஊராட்சி மன்ற அலுவலக புதிய கட்டிட திறப்பு விழா மற்றும் மக்கள் களம் - நிகழ்ச்சி,

**நாள் : 12.9.2023**

**செவ்வாய்க்கிழமை**

மாலை 4.30 மணி - பன்னீர்குளம் - கயத்தாறு கிழக்கு ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறை கேட்டல்.

மாலை5.15மணி-வடக்கு மயிலோடை (தெற்கு மயிலோடை ஊராட்சி) - கயத்தாறு கிழக்கு ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறைகேட்டல்,

மாலை 6.00 மணி - திருமலாபுரம் - கயத்தாறு கிழக்கு ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறை கேட்டல்.

மாலை 6.45 மணி குருமலை (கழுகாசலபுரம் ஊராட்சி)கயத்தாறுகிழக்கு ஒன்றியம் - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொதுமக்களின் குறை கேட்டல்,

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.



இராணிப்பேட்டை நகராட்சி வாரச்சந்தை மைதானத்தில் 20 ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார்அவர்களுக்கு திருவுருவ சிலையுடன்கூடிய குவிமாட அரங்கம்அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டும் விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்ஆர்.காந்தி தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியர் திருமதி ச.வளர்மதி மாவட்ட இளைஞர் அணி அமைப் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத்மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.வினோத் நகர துணை செயலாளர் ஏர்டெல் குமார் மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் இசட். அப்துல்லா நகர மன்ற துணை தலைவர் ரமேஷ் கர்ணா மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.ஜெயக்குமார் நகர உறுப்பினர்கள் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பி.யுவராஜா. மாணவரணி பாலாஜி மற்றும் கழகத்தினர்கலந்துகொண்டனர்.


அருள்மிகு
காசி விசாலாட்சி அம்மை
உடனாய காசி விசுவநாதர்
திருக்கோயில்
மேற்கு மாம்பலம், சென்னை – 600 033.
நாள் : 10.09.2023, ஞாயிற்றுக்கிழமை
காலை 6.30 – 8.00 மணிக்குள்
28 மாதத்தில் குடமுழுக்கு ஆயிரம், எல்லோர்க்கும் அறம்செய்யும் ஆன்மீக திராவிடம்.
அறம்காக்கும்
திராவிடமாடல்
ஆட்சியின்
1000
மாவது
திருக்கோயில்
நன்னீராட்டு
திருவிழா
ஆன்மீக
வளர்ச்சியில்
ஆயிரம் குடமுழுக்கு
நடத்தி சாதனை படைத்த
மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு
ஆயிரமாயிரம்
நன்றிகள்!
பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர்
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
ARASU ARTS

# கலைஞரும் நானும் 35


**“மருத்துவர்கள், உடல் நலமில்லாதவர்களை நலம் விசாரிப்பதுதான் வழக்கமான நடைமுறையாக இருக்கும். ஆனால், கலைஞர் அழைத்தால் ‘நீங்கள் எப்படி இருக்கீங்க, உங்க உடல்நலத்தைக் கவனித்துக் கொள்கிறீர்களா?’ என அக்கறை கொள்வார். அவரைப் போல் மனவலிமை கொண்ட தலைவரைப் பார்க்க முடியாது” எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் இதயநோய் மருத்துவர் தணிகாசலம்.**



■ மருத்துவர் **தணிகாசலம்**

“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, ஏதாவது ஒரு வகையில் தன்னுடைய இளம்பருவத்தில் அறியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. நான், என்னுடைய இளவயதில் பள்ளி, கல்லூரியில் படிக்கும் போதே அவரின் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் அறிந்து, ‘இப்படி ஓர் அறிவுப் பெட்டகமா!’ என்று அதிசயித்திருக்கிறேன். பின்னாட்களில் அதை நேரிலும் அனுபவத்திருக் கிறேன்.

1972–ஆம் ஆண்டுவாக்கில், நான் சென்னை பொது மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. அவருடைய நெருங்கிய உறவினர் ஒருவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போது நான், இதயம் சார்ந்த மேற்படிப்பு முடித்துவிட்டு, அரசு மருத்துவமனைக்கு வந்திருந்தேன்.



அவரது உறவினர் அனுமதிக்கப்பட்டிருந்த அறையின் எதிரில், கலைஞர் அவர்களுடன் எனது மூத்த மருத்துவர்கள் பேராசிரியர் அண்ணாமலை, பேராசிரியர் கிருட்டிணகுட்டி ஆகியோரும் மற்ற மூத்த மருத்துவர்களும் ஆலோசனை செய்து கொண்டி ருந்தனர். அப்போது, “உங்களில் யார் இதயநோய் நிபுணர்?” என்று அவர் கேட்டதும், அவர்கள் என்னை அழைத்தனர்.

கலைஞர் என்னிடம் “என் உறவினருக்கு என்ன பாதிப்பு? என்ன சாப்பாடு கொடுப்பது” எனக் கேட்டார். நான் அவரது உடல் நலம், சிகிச்சை அளித்துள்ள விவரம் ஆகிய வற்றை விளக்கியதுடன், அவருக்கான ‘டயட்’ உணவுக்கும் ஏற்பாடு செய்ததில் திருப்தியடைந் தார். அன்று அவருக்கு முக்கியமான வேலை இருந்தது. “அண்ணா சாலையில் தந்தை பெரியார் சிலை திறப்புவிழாவுக்குச் செல்ல வேண்டும். எனது கண்மணியை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்” என்று கூறிவிட்டுச் சென்றார்.

அன்றிலிருந்து தொடர்ந்து அவரது உறவினர்கள், அமைச்சர்கள், தொண்டர்கள் என யாருக்கு மருத்துவச் சிகிச்சை என்றாலும், என்னைச் சந்திக்க அனுப்பி வைப்பார். நானும் அவர்களைச் சோதித்துவிட்டு, அது தொடர்பான விவரங்களைச் சம்பந்தப்பட்டவருக்குச் சொல்லுவதைப் போலவே, கலைஞரிடமும் சொல்வேன். அவர்கள் மீது கலைஞர் கொண்டுள்ள அக்கறை அப்போது வெளிப்படும்.

## என்றும் மாறாத நம்பிக்கை

ஒருவர் மேல் நம்பிக்கை வைத்துவிட்டால், எந்தக் காரணத்தினாலும், யார் சொன்னாலும், கலைஞர் அந்த நம்பிக்கையை மாற்றிக்கொள்ள மாட்டார். சில நேரங்களில் சிகிச்சையின் போது பிற மருத்துவர்கள் தங்களது ஆலோசனைகளைச் சொன்னாலும், கடைசியாக என் ஆலோசனையைக் கேட்டுக் கொள்வார். அவர் கேட்கும் கேள்விகளுக்கு, அவரது சந்தேகத்தைத் தீர்ப்பதுபோல நான் பதில் சொல்லிவிட்டால், அந்த மருத்துவர்களின் யோசனைப்படி சிகிச்சை அளிக்க ஓகே சொல்லி விடுவார்.

அவர் என் மேல் கொண்டிருந்த இந்த நம்பிக்கை காரணமாக அவர்மீது பல மடங்கு மரியாதை உருவானது. தவிர, அவரது உடல்நலம் மீது அவரை விடவும் அதிக அக்கறை கொண்ட வனாக இருக்க வேண்டும், என்கிற எண்ணம் அப்படியான நம்பிக்கையைத்தான் கொடுத்தது. திரு.முரசொலி மாறன் அவர்களுக்கு சிகிச்சையின் போது அவர் என்மேல் கொண்ட நம்பிக்கையை எடுத்துச் சொல்ல வார்த்தைகளே இல்லை.

நான் அவ்வப்போது கலைஞர் அவர்களை நேரில் பார்க்கச் செல்வேன். அதற்காக அவரது உதவியாளர் சண்முகநாதனுக்கு போன் செய்வேன். அவரும் கலைஞரிடம் கேட்டறிந்து குறித்த நேரத்துக்கு வரச் சொல்லுவார். நான் பொதுவாக ஐந்து நிமிடத்துக்கு முன்பாகவே சென்றுவிடுவேன். ஆனால், அதற்கு முன்பே “டாக்டர் வந்துவிட்டாரா?” என்று கேட்பாராம். நானும் அந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என இன்றும் முயற்சித்துக் கொண்டி ருக்கிறேன்.

# ‘இதயம் எங்கே’ என்று கேட்டார்!

## மருத்துவக் குழுவில் பங்களிப்பு

கலைஞருக்கு முதுகுத்தண்டு கோளாறின்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது இதய நல நிபுணராக அந்தக் குழுவில் நானும் இருந்தேன். அந்த நாட்களை இப்போது நினைத்தாலும் நெஞ்சம் கணக்கும்.

சிகிச்சை முடிந்து, வீட்டுக்குச் செல்லும் முன்னர், ஒரு வாரம் மருத்துவமனையில் தங்கி ஓய்வெடுக்க வலியுறுத்தினர். அப்போது மாலை நேரத்தில் பூங்காவுக்குச் செல்வதை விரும்பியதால், அவருடன் எலும்பு மூட்டு அறுவை சிகிச்சைத் துறையில் இருந்தவர்கள் செல்வார்கள்.

நான் அவர்களுடன் செல்லாத ஒருநாளில் பூங்காவில் “ஹார்ட் எங்கே?” என்று கேட்டுள்ளார். மற்றவர்கள் விழித்தபோது “தணிகாசலத்தைக் கூப்பிடுங்கள்" என்று கூறியுள்ளார். அதுபோன்ற நேரங்களை நினைத்தால், இப்போதும் நான் நெகிழ்ந்து விடுவேன். அப்படி அவருடன் செல விடும் நேரங்களில், அவருடைய இளமைக்காலங்கள், போராட்டங்கள், திரை அனுபவங்கள் மற்றும் பல விவரங்களைப் பகிர்ந்து கொள்வார்.

## மனவலிமையின் உச்சம்

அவருடன் செலவிடும் நேரங்களில் நகைச் சுவைக்குப் பஞ்சமே இல்லை. சரளமாக ‘பஞ்ச்’ வசனங்கள் சொல்வதில், கலைஞருக்கு நிகர் கலைஞரே. உடல்நலம் சரியில்லாத நிலையில் மருத்துவமனையில் இருந்தபோதும் தனது நகைச்சுவைப் பேச்சால் எங்களைச் சுண்டி இழுப்பார்.

முதுகுத்தண்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது, அது தொடர்பான ஆவணத்தில் கையெழுத்து பெற வேண்டும். அதாவது நோயாளியின் சம்மதம் பெற வேண்டும். அந்த நோயின் பெயர், தன்மை, சிகிச்சை அளிக்க வேண்டிய விவரம் ஆகிய வற்றுடன், சிகிச்சையின் போதோ அல்லது அதற்குப் பிறகோ பக்க விளைவுகள் ஏற்படுமா என்ற நுணுக்கங்களை நோயாளியிடம் விளக்கி, அவர்களிடம் ஒப்புதல் பெற வேண்டும். இது உலகளாவிய நடைமுறை. அந்த ஆவணத்தைக் கொடுத்து அவரிடம் ஒப்புதல் வாங்க மருத்துவர்கள் தயங்கி நின்றதுடன், என் கையில் திணித்து கலைஞரைப் பார்க்க அனுப்பினர்.

**ஒருவர் மேல் நம்பிக்கை வைத்துவிட்டால், எந்தக் காரணத்தினாலும், யார் சொன்னாலும், கலைஞர் அந்த நம்பிக்கையை மாற்றிக்கொள்ள மாட்டார்.**

என்னைப் பார்த்ததும் ‘என்ன’ என்று கேட்டவரிடம், “இந்தத் தாளை படித்துப் பார்த்து உங்கள் ஒப்புதல் தேவை” என்று திணறினேன். இது எதற்கு என வாங்கி வரிக்கு வரி படித்துவிட்டு சில வினாடிகள் என்னை ஏறிட்டுப் பார்த்தார். பிறகு சிரித்தவர், “என்ன ஆபத்து ஏற்படும் என்பதைத் தெள்ளத்தெளிவாகக் கூறிவிட்டாயே? நடத்து... எங்கே கையொப்பம் இடவேண்டும்?” என்று கேட்டு கையொப்பமிட்டார்.

## அவருக்குப் பிடிக்காத ஒன்று

பிறகு அறுவை சிகிச்சை முடிந்து, தொடர் கண்காணிப்பில் இருந்த போது, நரம்பியல் நிபுணர், பரிசோதிக்கும் போது “உங்களுக்கு உணர்ச்சி இருக்கிறதா”? என்று கலைஞரிடம் கேட்டார். டாக்டரைப் பார்த்து, “எந்த உணர்ச்சி என்பதைத் தெளிவாகச் சொல்லுங்கள்” என்றார். நாங்கள் அனைவரும் சிரிப்பை அடக்கிக் கொண்டோம்.

பிறகு மருத்துவர் ஆள்காட்டி விரலையும், நடு விரலையும் காட்டி “தெரிகிறதா?” என்று கேட்டார். அதற்கு கலைஞர் “தெரிகிறது இரண்டு விரல்கள்” ஆனால், இந்த இரண்டு விரல்கள் எதையோ குறிப்பதால், அது எனக்குப் பிடிக்காத ‘ஒன்றை’ குறிக்கிறது” என்றார். இப்போது எங்களின் சிரிப்பை மேலும் அடக்க முடியவில்லை. அவருடைய நகைச்சுவைத் திறன் மட்டுமல்ல, வலிகளைத் தாங்கிக்கொண்டு, அதையும் தாண்டி தனது இயல்பை நிரூபிக்கும் அந்த மனவலிமை அசாத்தியமானது.

அவர் ஒரு சிறந்த மனிதநேயம் கொண்டவர், சிறந்த செயல்வீரர் இதனை என் சிறுவயது முதலே கண்டும், கேட்டும் இருக்கிறேன். பன்முகத்தன்மை கொண்ட கலைஞரை நினைக்கும்போது, ஐயன் திருவள்ளுவரின் வார்த்தைகள்தான் ஞாபகம் வருகிறது. ‘இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்’. என்கிற குறளுக்கேற்ப வாழ்ந்தும், செயல்படுத்தியும் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

...பகிர்வார்கள்

## வகுப்பறைக்கு உள்ளிருந்து குரல்கள்!



தமிழ்நாட்டுக்கெனப் புதிய கல்விக் கொள்கையை உருவாக்கும் முயற்சிகளை அரசு செய்து வருகிறது. அதற்கென அறிவிக்கப்பட்டுள்ள குழுவில் கல்வியாளர்கள் உட்பட பல்துறை வல்லுநர்களும் இடம்பெற்றுள்ளனர். இந்த நிலையில் ஆசிரியர் சிவா (கலகல வகுப்பறை சிவா) கல்விக் கொள்கை தொடர்பாக ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுடன் நிகழ்த்திய கலந்துரையாடலைத் தொகுப்பாகக் கொண்டு வந்துள்ளது பாரதி புத்தகாலயம்.

‘கல்வி சார்ந்த மாற்றங்களை மட்டுமல்ல கலந்துரையாடலையும் வகுப்பறைக்குள் தொடங்க வேண்டும்’ என்கிறார் சிவா. கல்விக் கொள்கைக் குழுவில் இடம்பெற்றுள்ள கல்வியியல் எழுத்தாளர் மாடசாமி இந்த நூலுக்கு அணிந்துரை அளித்துள்ளார்.

கல்வியில் என்ன மாற்றங்கள் வேண்டும் என்று மாணவர்கள் வழியே பதிவு செய்கிறது இந்த நூல். அது அவர்கள் பெயரிலேயே வெளியிடப்படுவதும் கவனிக்க வைக்கிறது.

## :.ப்ளாஷ்பேக்



### தளபதியும் வீரரும்!

2004-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலை முன்னிட்டு கழக இளைஞர் அணியைத் தயார்படுத்தும் வகையில், தமிழ்நாடு முழுக்கச் செயல்வீரர்கள் கூட்டம் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக 2003-ஆம் ஆண்டு வேதாரண்யத்தில் நடைபெற்ற செயல்வீரர் கூட்டத்துக்கு தளபதி அவர்கள் வருகை தந்தார். அப்போது அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஓய்வெ டுக்கும் அறையில் அவரை சந்தித்தேன். சட்டைப்பையில் இருந்த 10 ரூபாயை தேர்தல் நிதி யாக அவரிடம் அளித்தேன். ‘பெயர் என்ன?’ என்று விசாரித்தார், ‘வீராச்சாமி’ என்றேன். அப்படியான தருணத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது.



வீராச்சாமி

**–க.வீராச்சாமி, புட்பவனம் கிளை துணைச் செயலாளர், வேதாரண்யம், நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.


அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அன்பும் மனிதாபிமானமும்!

**1969-ஆம் ஆண்டு நவம்பர் மாதம், பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற குருநானக்கின் 500-வது பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார் கலைஞர். அங்கு, பஞ்சாபுக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள ஒற்றுமைகளை ஒப்பிட்டுப் பேசினார் கலைஞர். “சாதி, மத, மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டும் என பஞ்சாப் மாநிலத்தில் ‘குருநானக் வழி’ அறிஞர் பெருமக்கள் முழங்கியதுபோல, தமிழ்நாட்டில் ‘வள்ளுவர் வழி’ நின்று அறிஞர் பெருமக்கள் முழங்கி வருகின்றனர். அன்பும் , மனிதாபிமானமும் இல்லாதவன் ஆண்டவனை வெளியே விட்டு விடுகிறான். ஆனால், அன்பும் மனிதாபிமானமும் உள்ளவன் ஆண்டவனைத் தனக்குள் அடக்கி வைத்துக் கொள்கிறான்” எனப் பேசினார். அவரது பேச்சுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 236




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131